Department of Examinations - Sri Lanka

## கட்டாய கவனத்திற்கு

இந்த புள்ளியிடும் திட்டத்தில் தரப்பட்டுள்ள மாதிரி விடைகள் பரீட்சகர்களுக்கு வழிகாட்டுவதற்காக மட்டுமே ஆகும். பரீட்சார்த்திகள் மாதிரி விடைகளில் குறிப்பிடப்பட்டுள்ள சகல விடயங்களையும் தமது விடைகளில் உள்ளடக்காமல் இருக்கலாம். எனினும் எழுதப்பட்டுள்ள விடைகளை மதிப்பீடு செய்யும் போது மாதிரி விடைகளில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களுக்கு இசைவானவை எனத் தென்படுமாயின் பொருத்தமான புள்ளிகளை வழங்குவதற்கு பரீட்சகர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

# கல்வி பொது தராதர பத்திர ( உயர் தர )ப் பரீட்சை – 2021 (2022)
## 23 – அரசியல் விஞ்ஞானம்
## புள்ளி வழங்கல் திட்டம்

**வினாப்பத்திரம் I**
A மற்றும் B ஆகிய இரு பகுதிகளைக் கொண்டது.

வினாப்பத்திரம் I இன் A பகுதி

நேரம் : 02 மணித்தியாலங்கள்

தெரிவுகள் 5 இனைக் கொண்ட பல்தேர்வு வினாக்கள் 30 ஆகும். எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.
ஒரு வினாவிற்கு 02 புள்ளிகள் வீதம் மொத்தம் 60 புள்ளிகள் ஆகும்.

**வினாப்பத்திரம் I இன் B பகுதி**
குறு விடை வழங்கத்தக்க 20 வினாக்களைக் கொண்டது. எல்லா வினாக்களுக்கும் விடை எழுத வேண்டும்.
ஒரு வினாவுக்கு 02 புள்ளிகள் வீதம் 40 புள்ளிகள் ஆகும்.
வினாப்பத்திரம் I இன் A பகுதியினதும் B பகுதியினதும் மொத்தப் புள்ளிகள் 100 ஆகும்.

**வினாப்பத்திரம் II**

நேரம் : 03 மணித்தியாலயங்கள்

இது I,II,III என மூன்று பகுதிகளைக் கொண்டது.
I பகுதியில் இருந்து குறைந்தது ஒரு வினாவையும், II இல் இருந்து குறைந்தபட்சம் இரு வினாக்களையும், பகுதி III இல் இருந்து குறைந்தபட்சம் ஒரு வினாவையும் உள்ளடக்கி 05 வினாக்களுக்கு விடை எழுத வேண்டும்.

| | | |
|---|---|---|
| பகுதி I | – | கட்டுரை வினா ஒன்றும் அரை கட்டமைப்பு வகை வினாக்கள் காணப்படும். |
| பகுதி II | – | கட்டுரை வினா ஒன்றும் அரை கட்டமைப்பு வகை வினாக்கள் காணப்படும். |
| பகுதி III | – | கட்டுரை வினா ஒன்றும் அரை கட்டமைப்பு வகை வினாக்கள் காணப்படும். |

வினாப்பத்திரம் II இற்கான மொத்தப் புள்ளிகள் 100 ஆகும்.

**இறுதி புள்ளிகளைக் கணித்தல்**

வினாப்பத்திரம் I = 100
வினாப்பத்திரம் II = 100

இறுதிப் புள்ளி = 200/2 = 100

Department of Examinations - Sri Lanka

## பரீட்சகர்களுக்கான அறிவுறுத்தல்கள்

இப் புள்ளியிடும் திட்டத்தினுள் கல்வி பொதுத் தராதர (உ.தர) 2021 (2022) நடைபெற்ற பரீட்சைக்கான இல 23 அரசியல் விஞ்ஞானப் பாடத்திட்டத்திற்கு அமைவாக முதலாம் மற்றும் இரண்டாம் வினாத்தாள்களில் அடங்கும் வினாக்களுக்கான கட்டுப்பாட்டு பரிசோதனை சபையினால் தயாரிக்கப்பட்ட மாதிரி விடைத் தொகுதிகளே உள்ளடங்கியுள்ளது. இவ்விடைகள் உதவி பரிசோதகர்களுக்கு விடைகளை மதிப்பிடுவதற்கான ஒரு வழிகாட்டி மட்டுமே.

வினாத்தாள் II இற்கான விடைகளில் கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான அடிப்படை விடயங்கள் மாத்திரமே உள்ளடங்கியுள்ளது. இவ்விடயங்களுக்கு மேலதிகமாக பரிட்சார்த்திகள் மேலதிக விடயங்களை முன்வைத்திருப்பின் அதன் பொருத்தப்பாட்டினை கவனத்திற் கொண்டு அதற்கான புள்ளிகளை வழங்க பரிசோதகர் நடவடிக்கை எடுக்க வேண்டும். விடைகளுக்கான புள்ளிகளை வழங்கும்போது கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் குறித்து பரிசோதகர் விசேட அவதானத்தினைச் செலுத்த வேண்டும்.

அ. வினாவினை சரியாக விளங்கிக் கொள்ளப்பட்டுள்ளதா? அறிமுகம் மற்றும் ஆரம்பித்தல் என்பவற்றின் மூலம் அதனை விளங்கிக் கொள்ள முடியும்.

ஆ. வினாக்களுக்கு உரிய விடயங்களை சரியாகத் தெரிவு செய்துள்ளனரா? மற்றும் அவ்விடயங்களை சரியாக முறையில் ஒழுங்கமைத்து முன்வைத்துள்ளனரா? என்பது தொடர்பாகவும்

இ. விடயங்களை போதுமானளவு பகுப்பாய்வு செய்துள்ளனரா என்பது பற்றியும்

ஈ. இறுதி முடிவுக்கு வந்துள்ளனரா? மற்றும் இந்த இறுதி முடிவின் தர்க்க முறை மற்றும் பொருத்தமுடையதா என்பது பற்றியும்

பரீட்சார்த்திகள் விடையினுள் முன்வைக்கின்ற விடயங்கள் தொடர்பில் பிரச்சினைக்குரிய நிலைமை ஒன்று காணப்படுமாயின் அது தொடர்பில் பிரதான பரீட்சகரின் கவனத்திற்குக் கொண்டுவந்து தீர்மானம் ஒன்றினை மேற்கொள்ள வேண்டும்.

Department of Examinations - Sri Lanka

## வினாப்பத்திரம் - I

ஒட்டுமொத்த பாடத்திட்டமும் வினாத்தாளில் உள்ளடங்கும் வகையில் A, B என இரு பிரிவுகளைக் கொண்டது.
A பகுதி 5 தெரிவுகளைக் கொண்ட 30 வினாக்களைக் கொண்டது.
B பகுதி குறு விடைகள் 02 வீதம் எதிர்பார்க்கப்படும் 20 வினாக்களைக் கொண்டது.
ஒட்டுமொத்த பாடத்திட்டம் தொடர்பில் பரீட்சார்த்தியின் விடய ரீதியான தெளிவினை பரிசோத்திப்பது இப்பிரிவின் நோக்கமாகும்.

## வினாப்பத்திரம் II

மூன்று பகுதிகளையும் 10 வினாக்களையும் கொண்டது.

பகுதி I அரசியல் விஞ்ஞான பாடத்தினுள் உள்ளடங்கியுள்ள கோட்பாடுகள் மற்றும் அவற்றின் நடைமுறைப் பயன்பாடுகள் தொடர்பில் பரீட்சார்த்திகளின் அறிவு, தெளிவினை பரிசோதிப்பதே வினாப்பத்திரத்தின் இப்பகுதியின் நோக்கமாகும். இதன்படி சில வினாக்களின் மூலம் கோட்பாட்டு ரீதியான எண்ணக்கருக்கள் தொடர்பாக நேரடியாக பரீட்சார்த்தியின் அறிவினை பரிசோதிப்பதோடு மேலும் சில வினாக்கள் மூலம் தெரிவு செய்யப்பட்ட நாடுகள் சிலவற்றின் ஊடாக கோட்பாடு மற்றும் நடைமுறை என்பவற்றுக்கிடையில் காணப்படும் தொடர்புகள் பற்றிய பரீட்சாத்தியின் அறிவு மற்றும் தெளிவு என்பன பரிசோதிக்கப்படும்.

பகுதி II இன் நோக்கம் யாதெனில் இலங்கையில் பிரித்தானிய காலனித்துவ காலத்தில் பிரித்தானிய ஆட்சியாளர்களால் நடைமுறைப்படுத்தப்பட்ட அரசியல், பொருளாதார மற்றும் சமூக மறுசீரமைப்புகளின் தாக்கங்கள் மற்றும் அதன் பெறுபேறுகள் தொடர்பாகவும், சுதந்திரத்திற்குப் பின்னரான காலத்தில் இலங்கையின் அரசியல் மற்றும் அரசியலமைப்பு வளர்ச்சிகள் தொடர்பில் பரீட்சார்த்திகளின் அறிவு மற்றும் தெளிவினை பரிசோதிப்பதாகும். இம்முறை அப்பகுதியில் மோதல் தொடர்பான வினா ஒன்றும் காணப்படுகின்றது.

பகுதி III இன் நோக்கம் யாதெனில் ஒப்பீட்டு அரசியலமைப்பு, சர்வதேச அரசியலின் புதிய அசைவியக்க தளத்தில் இலங்கையின் வெளிநாட்டு கொள்கைத் தொடர்பாகவும், ஒட்டுமொத்த பாடத்திட்டதோடு தொடர்புடைய தனித் தலைப்புகள் சில தொடர்பில் பரீட்சார்த்தியிடம் காணப்படும் அறிவு மற்றும் தெளிவினை பரிசோதிப்பதாகும்.

Department of Examinations - Sri Lanka

## பகுதி II இற்கான அறிவுறுத்தல்கள்

**1. கட்டுரைவகை வினாக்கள்**

இவ்வினாக்கள் மொத்தமாக 20 புள்ளிகளைக் கொண்டவை. புள்ளிகளை வழங்குகையில் பின்வரும் அறிவுறுத்தல்களைக் கவனமாகப் பின்பற்றவும்.

i. அறிமுகம்/விடைக்கான பிரவேசம் – உயர்ந்தபட்சம் மூன்று புள்ளிகள்

ii. முக்கிய விடயங்கள்/கருத்துக்கள், கலந்துரையாடல் போன்றவற்றிற்கு 15 புள்ளிகள் ஒதுக்கப்பட்டுள்ளன (ஒவ்வொரு விடயத்திற்கும் இரண்டு புள்ளிகளை வழங்கலாம்)

iii. முடிவுரைக்கான உயர்ந்தபட்ச புள்ளிகள் இரண்டாகும்

**மேற்கூறப்பட்டவாறு புள்ளிகளை வழங்குவதுடன் பின்வரும் வழிகாட்டற் குறிப்புகளையும் கருத்திற் கொள்ளவும்.**

a) **அறிமுகம்/ விடைக்கான பிரவேசம்:** இது ஒரு அல்லது இரண்டு பந்திகளில் அமையலாம். எவ்வாறாயினும் வினாவை வேறுவடிவத்தில் மீளஎழுதுவதாக அமையக்கூடாது. விடையின் உள்ளடக்கத்தை அறிமுகம் செய்வதாக அமைந்திருத்தல் வேண்டும். புள்ளிவழங்கும்போது தரப்பட்டுள்ள விடைக்குப் பொருத்தமான விடயங்கள் அறிமுகத்தில் எழுதப்பட்டுள்ளதா என்பதைச் சரிபார்த்து புள்ளி வழங்கவும். பலவீனமானதோர்/ பொருத்தமற்றதோர் அறிமுகத்திற்கு புள்ளிகள் வழங்குவதா இல்லையா என்பதைப் பரீட்சகர்கள் தீர்மானிக்கமுடியும். நல்ல, தரமான, போதியளவு, கருத்துக்களைக் கொண்டுள்ள அறிமுகம் /விடைக்கான பிரவேசம் ஆகியவற்றைக் கொண்ட விடைக்கே முழுமையான புள்ளிகளை வழங்கப்பட முடியும்.

b) **கலந்துரையாடல்:** ஒவ்வொரு விடைக்கான முக்கிய விடயங்கள் / கருத்துக்களை புள்ளிவழங்கும் திட்டம் வழங்குகின்றது. பரீட்சகர்கள் புள்ளிவழங்கும் திட்டத்திலுள்ள விடயங்கள் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளதா, போதியளவு விவரிக்கப்பட்டுள்ளதா என்பதைச் புள்ளி வழங்கும்போது சரிபார்த்தல் வேண்டும். வெறுமனே கருத்துக்களை மட்டும் (Points) குறிப்பிடுவது ஒருநல்ல விடையாகாது. பரீட்சார்த்திகள் தமது கலந்துரையாடலில் சுயாதீன அறிவினை மற்றும் அரசியல் விஞ்ஞான பாடத்துடன் தொடர்புடைய புதிய தகவல்களை முன்வைத்திருப்பார்களாயின் அதற்கு மேலதிக புள்ளிகள் வழங்கப்பட வேண்டும்.

d) **விடையின் தரம்:** புள்ளிகள் வழங்கும்போது விடையின் ஒட்டுமொத்த தரம் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். புள்ளி வழங்கும்போது பரீட்சார்த்திகளின் சுயாதீன அறிவு, கருத்துக்கள் மற்றும் வாதங்கள் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். பரீட்சார்த்திகள் ஒரு தரமான விடையின் மூலம் தமக்குள்ள பாடம் தொடர்பான உயர் மட்டஅறிவு, சுயாதீனஅறிவு, அத்துடன், வினா தொடர்பான தமது விவரன, மதிப்பீட்டு மற்றும் பகுப்பாய்வு திறன்களை வெளிப்படுத்துவர். தரமான விடைகள் பரீட்சார்த்திகளின் எழுத்தாற்றல், முன்வைப்புத் திறன், மொழியினை திறமையாகவும் சரியாகவும் வெளிப்படுத்துவதாக அமையும். தரமான விடையொன்றினை அதனுடைய அறிமுகம், விவரண மற்றும் பகுப்பாய்வு ரீதியான உள்ளடக்கம் மற்றும் முடிவுரையின் மூலம் மதிப்பிட முடியும்.

Department of Examinations - Sri Lanka

c) **முடிவுரை:** இது வினாவை மீளஎழுதுவதன்று. ஒரு சிறந்த முடிவுரை பின்வரும் விடயங்களைக் கொண்டமைதல் வேண்டும்.

1. விடையில் வழங்கப்பட்டுள்ள விடயங்களின் சரியான சுருக்கம் ஒன்றினை முன்வைத்தல்
2. வழங்கப்பட்டுள்ள விடையின் பகுப்பாய்வு சுருக்கம் ஒன்றினை முன்வைத்தல்
3. பரீட்சார்த்தி விடையில் முன்வைத்துள்ள பிரதான வாதங்கள் இவ்வினா பற்றிய பரீட்சார்த்தியின் சுய அவதானிப்பு / பகுப்பாய்வு வாதம் ஆகியவற்றை முன்வைக்கலாம்.
4. முடிவுரை ஒன்று அல்லது இரண்டு பந்திகளில் அமையலாம்.

சிலநேரங்களில் பரீட்சார்த்திகள் முடிவுரை என குறிப்பிடாமல் தமது விடையினை நிறைவு செய்திருக்க முடியும். இது குறித்து பரீட்சகர்கள் அவதானமாக இருக்க வேண்டும்.

**2. பகுதியளவிலான கட்டமைப்பு வினாக்கள்**

இவ் வினாப்பத்திரத்தில் நான்கு பகுதியளவில் கட்டமைக்கப்பட்ட வினாக்கள் உள்ளன. பரீட்சார்த்திகள் வழங்கப்பட்டுள்ள பல தெரிவுகளில் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளித்தல் வேண்டும்.

- பகுதியளவிலான கட்டமைக்கப்பட்ட ஒவ்வொரு வினாவும் உயர்ந்தபட்சம் 05 மற்றும் 10 புள்ளிகளைக் கொண்டுள்ளன. ஆகவே மொத்தம் 20 புள்ளிகள் இப்பகுதிக்கு வழங்கப்படும்.

பகுதியளவிலான கட்டமைக்கப்பட்ட விடைகளை மதிப்பிடுகையில் பின்வரும் வழிகாட்டலைப் பின்பற்றவும்.

i. பரீட்சார்த்திகள் ஒவ்வொரு தலைப்புக்கும் நீண்ட விடையை எழுதவேண்டும் என எதிர்பார்க்கப்படவில்லை. பொதுவாக சுருக்கமான விடையாக இருத்தல் வேண்டும். அதேவேளை தலைப்பின் அனைத்து பிரதான விடயங்களையும் உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

ii. பகுதியளவிலான கட்டமைக்கப்பட்ட வினாவுக்கான விடை கட்டுரைவினாவினைப் போன்று பின்வரும் பகுதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும். அவையாவன

   i) அறிமுகம் / விடைக்கான பிரவேசம்
   ii) தரவுகளை / கருத்துக்களை அடிப்படையாகக் கொண்ட விவரிப்பு: கலந்துரையாடலுக்கு புள்ளி வழங்கும்போது விடையின் தரம், குறிப்பாக பாடம் தொடர்பான ஆழமானஅறிவு, சுயாதீனஅறிவு, விவரண மற்றும் பகுப்பாய்வுதிறன்கள், மொழிநடை மற்றும் முன்வைக்கும் திறன் என்பவற்றினைக் கருத்தில் கொள்ளவேண்டும்.
   iii) முடிவுரை

**குறிப்பு:** சில பரீட்சார்த்திகள் கட்டுரைவகை மற்றும் பகுதியளவில் கட்டமைக்கப்பட்ட வினாக்களுக்கு விடையளிக்கையில் அறிமுகம் / விடைக்கான பிரவேசம், முடிவுரை ஆகியவற்றை வெளிப்படையாகக் குறிப்பிடாது எழுதியிருக்கலாம். தயுவுசெய்து அவை பற்றிக் கருத்திற் கொண்டு உரிய புள்ளிகளை வழங்கவும்.

Department of Examinations - Sri Lanka

## விடைத்தாள்களுக்குப் புள்ளியிடல் - பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன்பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற குமிழ்முனை பேனாவை பயன்படுத்தவும்.
2. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும்போது **தெளிவான இலக்கத்தில்** எழுதவும்.
3. இலக்கங்களை எழுதும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, சிற்றொப்பத்தை இடவும்.
4. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் ☐ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.

**உதாரணம் - வினா இல 03**

(i) ............................................................................ ✓ $\frac{4}{5}$
............................................................................
............................................................................

(ii) ............................................................................ ✓ $\frac{3}{5}$
............................................................................
............................................................................

(iii) ............................................................................ ✓ $\frac{3}{5}$
............................................................................
............................................................................

(03) (i) $\frac{4}{5}$ + (ii) $\frac{3}{5}$ + (iii) $\frac{3}{5}$ = $\boxed{\frac{10}{15}}$

**பல்தேர்வு விடைத்தாள் (துளைத்தாள்)**

1. க.பொ.த.(உ. தர) மற்றும் தகவல் தொழிநுட்பப் பரீட்சைக்கான துளைத்தாள் திணைக்களத்தால் வழங்கப்படும். சரியாக துளையிடபட்டு அத்தாட்சிப்படுத்திய துளைத்தாள் தங்களுக்கு கிடைக்கப்பெறும். அத்தாட்சிப்படுத்திய துளைத்தாளைப் பயன்படுத்துவது பரீட்சகரின் கடமையாகும்.

2. அதன் பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப் பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்துவிட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.

3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை ✓ அடையாளத்தாலும் பிழையான விடையை ○ அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும்.

Department of Examinations - Sri Lanka

**கட்டமைப்பு கட்டுரை விடைத்தாள்கள்**

1. பரீட்சார்த்திகளால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும். பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிடவும். புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் ✓ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.
2. புள்ளிகளை ஓவலண்ட் கடதாசியின் இடது பக்கத்தில் குறிக்கவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன் பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக 2 இலக்கங்களில் பதியவும். வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டி விடவும்.
4. மொத்த புள்ளிகளை கவனமாக கூட்டி முன் பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் வழங்கப்பட்டுள்ள விடைகளுக்கான புள்ளியை மீண்டும் பரிசீலித்த பின் முன்னால் பதியவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் வழங்கப்படும் புள்ளிகளை உரிய விதத்தில் எழுதவும்.

**புள்ளிப்பட்டியல் தயாரித்தல்**

இம்முறை சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்படமாட்டாது. இது தவிர ஒவ்வொரு வினாப் பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும். பத்திரம் I ற்கான பல்தேர்வு வினாப்பத்திரம் மட்டும் இருப்பின் புள்ளிகள் இலக்கத்திலும் எழுத்திலும் பதியப்பட வேண்டும்.

ooo

Department of Examinations - Sri Lanka

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2021 (2022)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தரப் பரீட்சை, 2021 (2022)
General Certificate of Education (Adv. Level) Examination, 2021 (2022)

| | | |
|---|---|---|
| දේශපාලන විද්‍යාව I<br>அரசியல் விஞ்ஞானம் I<br>Political Science I | 23 T I | පැය දෙකයි<br>இரண்டு மணித்தியாலம்<br>Two hours |

சுட்டெண் : ..............................................

**அறிவுறுத்தல்கள்:**

- இவ்வினாத்தாள் **A, B** ஆகிய **இரண்டு** பகுதிகளைக் கொண்டுள்ளது.
- பகுதி **A** பல்தேர்வு வினாக்கள் **30** இனையும் பகுதி **B** குறு வினாக்கள் **20** இனையும் கொண்டுள்ளன.
- சகல வினாக்களுக்குமான விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதுக.
- ஒவ்வொரு வினாவுக்கும் **இரண்டு** புள்ளிகள் வீதம் மொத்தம் **100** புள்ளிகள் வழங்கப்படும்.

பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்

| பக்க இல. | வினா இல. | புள்ளிகள் |
|---|---|---|
| 1 | 1 - 3 | |
| 2 | 4 - 10 | |
| 3 | 11 - 18 | |
| 4 | 19 - 24 | |
| 5 | 25 - 30 | |
| 6 | 31 - 38 | |
| 7 | 39 - 46 | |
| 8 | 47 - 50 | |
| மொத்தம் | | |

| | கையொப்பம் | குறியீட்டெண் |
|---|---|---|
| 1 ஆம் பரீட்சகர் | | |
| 2 ஆம் பரீட்சகர் | | |
| மேலதிக பிரதம பரீட்சகர் | | |
| எண்கணிப் பரிசோதகர் | | |
| பிரதம பரீட்சகர் | | |

## பகுதி A

- **1** தொடக்கம் **20** வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்குமான **சரியான** அல்லது **மிகவும் பொருத்தமான** விடையைத் தெரிவு செய்க.

**1.** அரசியல் என்பது
(1) பொது நிர்வாகம் தொடர்பான விடயங்களுடன் மட்டுப்படுத்தப்பட்டதாகும்.
(2) எப்போதும் சமூக நலனுடன் தொடர்புடையதாகும்.
(3) தேர்தல் செயன்முறையுடன் வரையறுக்கப்பட்டதாகும்.
(4) பிரஜைகள் மத்தியில் நிலவும் ஒரு சமூகப் பிரயோகம் ஆகும்.
(5) சமூகத்தின் தார்மீக விழுமியங்களைக் கற்பதுடன் தொடர்புடையதாகும். (......)

**2.** அரசியல் விஞ்ஞானம்
(1) அரசியல் அதிகாரத்தினைப் பெற்றுக்கொள்வதனை நோக்காகக் கொண்டது.
(2) பொதுக் கொள்கையாக்கச் செயன்முறையினைக் கற்பதுடன் வரையறுக்கப்பட்டது.
(3) சமூக விஞ்ஞானத்தின் ஒரு பிரிவு / கிளையாகக் காணப்படுகின்றது.
(4) கட்சி அரசியலை அதைரியப்படுத்துகின்றது.
(5) பொது அறிவினை அடிப்படையாகக் கொண்டது. (......)

**3.** அரசியலமைப்புவாதம்
(1) தடைகள் மற்றும் சமன்பாடுகள் தத்துவத்தினை மழுங்கடிக்கின்றது.
(2) பிரதிநிதித்துவ ஜனநாயகம் என்ற கருத்துக்கு எதிராகச் செல்கின்றது.
(3) ஊழல் மற்றும் அதிகார துஷ்பிரயோகத்தினை ஊக்குவிக்கின்றது.
(4) நிறைவேற்று மற்றும் சட்டத்துறைகளிடம் அரச அதிகாரம் குவிமையப்படுத்தப்படுவதற்கு உதவுகின்றது.
(5) பிரஜைகளின் அடிப்படை உரிமைகள் மற்றும் சுதந்திரத்தினைப் பாதுகாக்கின்றது. (......)

Department of Examinations - Sri Lanka

4. சமூக ஜனநாயகம்
   (1) 17ஆம் நூற்றாண்டில் தோற்றம் பெற்றது.
   (2) தாராண்மைவாதத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தது.
   (3) பிரித்தானிய பழமைபேண் கட்சியின் அரசியல் கருத்தியலாகக் காணப்பட்டது.
   (4) முதலாளித்துவம், சோசலிசம் ஆகிய இரண்டினதும் பண்புகளைக் கொண்டுள்ளது.
   (5) பொருளாதார சமத்துவத்தை இல்லாதொழிப்பதற்கு முதலாளித்துவத்திற்கு இருக்கும் இயலுமையினை நம்பியது. (......)

5. சட்டத்தின் ஆட்சி
   (1) அரசாங்கத்தின் பணியக வர்க்க அதிகாரத்துவத்தினை நியாயப்படுத்துகின்றது.
   (2) அரசாங்கம் தேசிய அவசரகால நிலைமைகளின்போது எதேச்சைப் போக்கில் செயற்பட உதவுகின்றது.
   (3) அரசாங்கத்தின் தீர்மானங்கள் எப்போதும் பெரும்பான்மையினரின் விருப்பத்தினை வெளிப்படுத்த வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றது.
   (4) அரசியல் அதிகாரத்தினை பொறுப்புக்கூறலின்றிப் பயன்படுத்துவதனைத் தடுப்பதை நோக்காகக் கொண்டது.
   (5) சோசலிசத்தின் ஒரு சட்ட எண்ணக்கருவாகும். (......)

6. பொதுக்கொள்கை உருவாக்கத்தில் அரசியல் கட்சிகளின் வகிபங்கில் அடங்குவது
   (1) அரசியல் அதிகாரத்தினைக் கைப்பற்றுவதற்காக மாத்திரம் பொதுமக்களின் பிரச்சினைகளைப் பயன்படுத்துதல்
   (2) பொதுக்கொள்கையின் விளைவுகள் தொடர்பாக பொதுமக்களுக்கு அறிவூட்டுதல்
   (3) பொதுக்கொள்கை உருவாக்கச் செயன்முறையில் பொதுமக்களின் பங்குபற்றுதலைக் கட்டுப்படுத்துதல்
   (4) பொதுக்கொள்கை உருவாக்கத்தின் ஊடாக தனியார் நலனை ஊக்குவித்தல்
   (5) அரசியல் தலைமைத்துவம் பொதுக்கொள்கை விவாதங்களில் ஈடுபடுவதனை உறுதிப்படுத்துதல் (......)

7. இலங்கையின் அரசியல் கட்சி முறையின் அண்மைக்காலப் போக்குகளில் உள்ளடங்குவது
   (1) மரபுரீதியான கட்சிக் கருத்தியல்களைத் தொடர்ச்சியாகப் பேணிச் செல்வதாகும்.
   (2) இன - மத கட்சிகள் இல்லாதுபோயுள்ளமையாகும்.
   (3) மரபுரீதியான இடதுசாரிக் கட்சிகளின் செல்வாக்கு அதிகரித்துள்ளமையாகும்.
   (4) மரபுரீதியான இரு பிரதான கட்சிகளின் வீழ்ச்சியாகும்.
   (5) கட்சிகளின் உள்ளக முரண்பாடுகள் குறைவடைந்துள்ளமையாகும். (......)

8. இலங்கையின் விகிதாசார பிரதிநிதித்துவ முறையின் விளைவாக அமைவது
   (1) சிறிய கட்சிகள் அதிக பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக்கொள்வதற்குச் சந்தர்ப்பம் கிடைத்துள்ளமையாகும்.
   (2) தேர்தல் வன்முறைகள் குறைவடைந்துள்ளமையாகும்.
   (3) தேசியப்பட்டியல் அறிமுகம் செய்யப்பட்டமையினால் ஜனநாயகம் வலுப்படுத்தப்பட்டுள்ளமையாகும்.
   (4) தேர்தல் பிரசாரத்துக்கான செலவுகள் குறைந்துள்ளமையாகும்.
   (5) இனத்துவ அடையாளத்துடன் அரசியல் கட்சிகள் தோற்றம் பெறுவதனைத் தடுத்துள்ளமையாகும். (......)

9. இலங்கையின் முதலாம் குடியரசு அரசியலமைப்பு (1972)
   (1) பொதுச்சேவையினை அரசியல் நிறைவேற்றுத்துறையின் கட்டுப்பாட்டில் இருந்து விடுவித்தது.
   (2) அரச அதிகாரிகளை நியமித்தல், இடமாற்றம் செய்தல் ஆகியன தொடர்பான அதிகாரத்தினை அமைச்சரவைக்கு வழங்கியது.
   (3) அரச சேவைகள் ஆலோசனைச் சபையினை இல்லாதொழித்தது.
   (4) அரச சேவையின் சுயாதீனத் தன்மையினை உறுதிப்படுத்தும் வகையில் அரசியலமைப்பு ஏற்பாடுகளை அறிமுகம் செய்தது.
   (5) அரச சேவைக்கான ஆட்சேர்ப்புச் செயன்முறையினை அரசியல் கலப்பற்றதாக்கியது. (......)

10. சமகால அரசியலில் தேசிய நலன்களை அடைந்துகொள்வதற்குக் காணப்படும் வழிமுறையாக (ஊடகம்) அமைவது
   (1) இராஜதந்திர தொடர்புகள்
   (2) அரசியல் கட்சிகள்
   (3) பல்தேசியக் கம்பனிகள்
   (4) உயர் குழாமினர்
   (5) சமூக இயக்கங்கள் (......)

**11.** சுதந்திரத்துக்குப் பின்னரான இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை
(1) தெற்காசியப் பிராந்திய அரசுகளின் முக்கியத்துவத்தினை அலட்சியம் செய்தது.
(2) சோஷலிசக் கருத்தியல் ஊடாக வழிப்படுத்தப்பட்டது.
(3) அதிகாரத்தில் இருக்கும் ஆட்சியாளர்களின் கருத்தியல் மற்றும் நலன்களினால் வடிவமைக்கப்படுகின்றது.
(4) இலங்கையின் பூகோளரீதியான அமைவிடத்தின் நன்மைகளை எப்பொழுதும் மறுதலித்துள்ளது.
(5) ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கைகளின் ஊடாகத் தீர்மானிக்கப்பட்டது. (......)

**12.** அரசியல் விஞ்ஞானத்தில் நடத்தைவாத அணுகுமுறை
(1) புராதன கிரேக்க காலமளவிற்குச் செல்லும் வரலாற்றைக் கொண்டது.
(2) அனுபவவாத ஆய்வுடன் தொடர்புபட்டது.
(3) அரசியல் நிறுவனங்களின் வரலாற்றினை வலியுறுத்துகின்றது.
(4) அமெரிக்க அரசியல் விஞ்ஞானிகளின் ஆதரவினைப் பெறத் தவறியது.
(5) தனிப்பட்டவர்களுடைய அரசியல் நடத்தைகளை ஆய்வு செய்வதனை அலட்சியம் செய்கின்றது. (......)

**13.** அரசாங்கம்
(1) அரசினை விட நீண்ட இருப்பினைக் கொண்டுள்ளது.
(2) சமூகத்தின் அரசியல் அதிகாரத்தின் மத்திய நிறுவனமாகும்.
(3) அரசின் பிரதான முகவர் நிறுவனமாகும்.
(4) தேசத்தின் வெளி இறைமையினைக் கொண்டுள்ளது.
(5) அரசு என்ற எண்ணக்கருவுக்குச் சமாந்தரமானது. (......)

**14.** இந்திய மதசார்பின்மைவாதம் வலியுறுத்துவது,
(1) சகல மதங்களையும் அரச மதங்களாகக் கருதப்படுவதனையாகும்.
(2) அரசு சகல மதங்களையும் பக்கச்சார்பின்றிக் கவனிப்பதனையாகும்.
(3) சகல பிரஜைகளினதும் இனத்துவ அடையாளங்களை மதிப்பதனையாகும்.
(4) சிறுபான்மை மதங்களுக்கு விசேட கவனிப்பு வழங்கப்படுவதனையாகும்.
(5) மதங்களைக் கற்பிப்பது தொடர்பாக ஏற்படும் தத்துவார்த்த சர்ச்சைகளைத் தீர்ப்பதற்கு அரசு தலையிடுவதனையாகும். (......)

**15.** தாராண்மைவாதம்
(1) அரசு வர்க்கச் சமூகங்களில் நிலைகொள்ளும் என வாதிடுகின்றது.
(2) பிரஜைகளின் தனிப்பட்ட சுதந்திரத்தினைப் பாதுகாப்பதை நோக்காகக் கொண்டது.
(3) சந்தைச் செயற்பாடுகளில் அரசின் தலையீட்டினை ஊக்குவிக்கின்றது.
(4) மாக்சியவாதிகளால் ஆதரவு வழங்கப்பட்ட ஓர் அரசியல் கருத்தியலாகும்.
(5) சிவில் சமூகச் செயற்பாடுகளை கட்டுப்படுத்துகின்றது. (......)

**16.** கனடாவானது
(1) ஓர் அர்த்த (அரைகுறை) சமஷ்டி என அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.
(2) ஒப்பீட்டளவில் மேம்பட்ட சமஷ்டி முறையினைக் கொண்ட ஒரு பெரிய நாடாகும்.
(3) பகிர்ந்த ஆட்சி (shared rule), சுய ஆட்சி (self rule) என்பவற்றினை இணைப்படுத்தும் அரசியலமைப்பு ஏற்பாடுகளைக் கொண்டுள்ள நாடாகும்.
(4) கனடியர்களுக்குச் சுயாட்சியினை வழங்கவில்லை.
(5) ஓரவை சட்டசபையினைக் கொண்டுள்ளது. (......)

**17.** ஐக்கிய அமெரிக்காவின் அரசியலமைப்பு
(1) அதிகாரப் பிரிவினைக்கான ஏற்பாடுகளை வழங்கவில்லை.
(2) கூட்டாட்சிவாதத்தினை நிராகரிக்கின்றது.
(3) முன்னர் காணப்பட்ட ஒற்றையாட்சி அரசியலமைப்பினை இல்லாதொழித்து உருவாக்கப்பட்டுள்ளது.
(4) வெளிநாட்டு அரசுகளுடன் உடன்படிக்கைகள் மேற்கொள்வதற்கு மாநில அரசுகளுக்கு அதிகாரங்களை வழங்கியுள்ளது.
(5) மத்திய அரசாங்கத்தின் அதிகாரங்களை மாத்திரம் பட்டியலிட்டுள்ளது. (......)

**18.** ஜனாதிபதி அரசாங்க முறைமைக்குரிய தன்மையாக அமைவது
(1) சட்டத்துறை மற்றும் நிறைவேற்றுத் துறைக்குத் தனித்தனியான தேர்தல் இடம்பெறுகின்றமை
(2) நிறைவேற்றுத்துறை தனது இருப்புக்குச் சட்டத்துறையில் தங்கியிருத்தல்
(3) ஜனாதிபதி அரசின் தலைவர் அல்லாதிருத்தல்
(4) சட்டத்துறை மற்றும் நிறைவேற்றுத்துறையின் பதவிக்காலம் ஒரே நேரத்தில் முடிவுக்கு வருதல்
(5) ஜனாதிபதியை பதவியில் இருந்து அகற்றுவது ஒப்பீட்டளவில் இலகுவான காரியமாதல் (......)

Department of Examinations - Sri Lanka

**19.** வெஸ்ட்மினிஸ்டர் மாதிரி அரசாங்க முறை
(1) பிராந்திய அரசாங்க முறைக்கு ஒப்பானது.
(2) அரசின் தலைவரை பொதுத் தேர்தல் ஊடாக தெரிவு செய்வதற்கான ஏற்பாடுகளை வழங்குகின்றது.
(3) பாராளுமன்றம் சட்டவாக்கத்தில் மீயுயர்த்தன்மையினைக் கொண்டுள்ளது.
(4) சட்டங்களை நீதிப்புனராய்வுக்கு உட்படுத்த அனுமதியளிக்கிறது.
(5) கெபினட் அமைச்சர்களின் கூட்டுப் பொறுப்புக்கான ஏற்பாடுகளை வழங்குவதில்லை. (......)

**20.** இலங்கையின் டொனமூர் அரசியலமைப்பு
(1) விகிதாசார பிரதிநிதித்துவ முறையினை அறிமுகம் செய்தது.
(2) தேசாதிபதியை அமைச்சரவை சபையின் தலைவராக்கியது.
(3) ஜனநாயக அரசாங்கத்துக்கான அடித்தளத்தினை இட்டது.
(4) இனவாரிப் பிரதிநிதித்துவத்தினை ஊக்குவித்தது.
(5) பெண்களுக்கு வாக்குரிமை வழங்குவதை நிராகரித்தது. (......)

- **21** தொடக்கம் **25** வரையுள்ள வினாக்களுக்கு தரப்பட்ட கூற்றுகளிலிருந்து **சரியான கூற்றுத் தொகுதியினைக்** கொண்ட விடையைத் தெரிவு செய்க.

**21.** சோல்பரி அரசியலமைப்பின் வெஸ்ட்மினிஸ்டர் பண்புகளாக அமைவன
A – மகா தேசாதிபதி நாம நிர்வாகியாகக் காணப்பட்டமை
B – அரசியல் நிறைவேற்றுத்துறை பாராளுமன்றத்தினால் தெரிவுசெய்யப்பட்டமை
C – சட்டத்துறை ஈரங்க சபையாகக் காணப்பட்டமை
D – பிரதமர் அமைச்சரவையின் தலைவராகக் காணப்பட்டமை
E – மகா தேசாதிபதி பாராளுமன்றத்துக்குப் பொறுப்புக்கூற கடமைப்பட்டிருந்தமை

(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE (......)

**22.** இலங்கையின் 1978 ஆம் ஆண்டு இரண்டாம் குடியரசு அரசியலமைப்பின் அடிப்படை உரிமைகள் தொடர்பான அத்தியாயம்
A – சிவில் மற்றும் அரசியல் உரிமைகளை உறுதி செய்கின்றது.
B – அடிப்படை உரிமை மீறல் தொடர்பாக எந்த ஒரு நீதிமன்றத்திலும் மனுத்தாக்கல் செய்வதற்கு பிரஜைகளுக்கு வாய்ப்பளிக்கின்றது.
C – அடிப்படை உரிமைகள் தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்கான அதிகாரம் உயர்நீதிமன்றத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.
D – கூட்டு மற்றும் சமூக உரிமைகள் உள்ளடக்கப்படாமையினால் விமர்சனத்துக்கு உள்ளாகியுள்ளது.
E – அவசரகால நிலைமைகளின்போது அடிப்படை உரிமைகள் மீது கட்டுப்பாடுகளை விதிக்கின்றது.

(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE (......)

**23.** சமாதானத்தினைக் கட்டியெழுப்புதல்
A – அடிமட்ட சமாதான முயற்சிகளை மாத்திரமே ஊக்குவிக்கின்றது.
B – ஒவ்வொரு நாட்டினதும் பிரத்தியேக சூழலுக்கேற்ப வடிவமைக்கப்படுகின்றது.
C – நீண்டகால மோதல்கள் இடம்பெற்ற சமூகங்களில் நிலையான சமாதானத்தை வலியுறுத்துகின்றது.
D – பிரஜைகள் மற்றும் சிவில் சமூக இயக்கங்களினது பங்கேற்றலை வலியுறுத்துகின்றது.
E – நேர்க்கணிய (positive) மற்றும் எதிர்க்கணிய (negative) சமாதானம் ஆகிய இரண்டினையும் உள்ளடக்கியுள்ளது.

(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE (......)

**24.** இலங்கையின் முதலாம் குடியரசு அரசியலமைப்பின் (1972) கீழ் சட்டத்துறை
A – நீதித்துறையின் மேலாய்வுக்கு (கண்காணிப்புக்கு) உட்படவில்லை.
B – அரச அதிகாரத்தின் மீயுயர் கருவியாகக் கருதப்பட்டது.
C – பிரித்தானிய பாராளுமன்ற முறையில் இருந்து வேறுபட்டிருந்தது.
D – ஈரங்க சபையாகக் காணப்பட்டது.
E – உத்தியோகபூர்வமாக தேசிய அரசுப் பேரவை என அழைக்கப்பட்டது.

(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE (......)



Department of Examinations - Sri Lanka

**25.** அமெரிக்க சமஷ்டி அரசாங்க முறை

A – மாநிலங்களின் சுயாதீனத்தன்மை என்ற சிந்தனையில் உருவாக்கப்பட்டுள்ளது.
B – அரசியலமைப்புத் திருத்தங்களுக்கு மாநில சட்டசபைகளின் அனுமதியினைக் கோருகின்றது.
C – மத்திய மற்றும் மாநில அரசாங்கங்களுக்கு ஒத்தியங்கு அதிகாரத்தினை வழங்கவில்லை.
D – ஈரங்க சட்டசபை ஒன்றினை உருவாக்கியது.
E – அரசியலமைப்பின் மேலாண்மையினை ஒரு முக்கியமான அடிப்படைத் தத்துவமாக நோக்குகின்றது.

(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE (......)

- **26** தொடக்கம் **30** வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றும் இரு கூற்றுகளைக் கொண்டுள்ளன. பின்வரும் அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள (1), (2), (3), (4), (5) ஆகிய விடைகளில் இருந்து பின்வரும் இரு கூற்றுகளுக்கும் மிகச் சரியாகப் பொருந்தும் விடையின் இலக்கத்தினைத் தெரிவுசெய்து அடைப்புக்குறிக்குள் எழுதுக.

| இலக்கம் | முதலாவது கூற்று | இரண்டாவது கூற்று |
|---|---|---|
| (1) | உண்மை | உண்மை |
| (2) | உண்மை | பொய் |
| (3) | பொய் | உண்மை |
| (4) | பொய் | பொய் |
| (5) | உண்மை | உண்மையாக இருப்பதுடன் முதலாவது கூற்றை மேலும் விளக்குகின்றது. |

| | முதலாவது கூற்று | இரண்டாவது கூற்று | |
|---|---|---|---|
| 26. | 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் கீழ் நீதிமன்றத்தால் தண்டனை வழங்கப்பட்ட குற்றவாளி ஒருவருக்கு பொது மன்னிப்பு வழங்கும் அதிகாரத்தை ஜனாதிபதி மாத்திரம் கொண்டுள்ளார். | அப் பொது மன்னிப்பு வழங்கும் அதிகாரத்தைப் பயன்படுத்துவதற்கு முன்னர் ஜனாதிபதி உயர்நீதிமன்றத்தின் ஆலோசனையைப் பெற்றுக் கொள்ள வேண்டும். | (......) |
| 27. | 1978ஆம் ஆண்டு அரசியலமைப்பின்படி பாராளுமன்ற உறுப்பினர்கள் தேர்தல் மாவட்டங்களை அடிப்படையாகக் கொண்டு தெரிவு செய்யப்படுவர். | இலங்கையின் அடிப்படை உரிமைகள், இன, மத ஒற்றுமை மற்றும் தேசிய பொருளாதாரம் என்பனவற்றின் நலன்களுக்காக சட்டரீதியான மட்டுப்பாடுகளுக்கு உள்ளாகியுள்ளன. | (......) |
| 28. | 1978ஆம் ஆண்டு அரசியலமைப்பின் 20ஆம் திருத்தத்திலுள்ள பாராளுமன்றப் பேரவை 5 உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. | 1978ஆம் ஆண்டு அரசியலமைப்பின் 20ஆம் திருத்தத்தின்படி தாபிக்கப்பட்ட பாராளுமன்றப் பேரவையின் உறுப்பினர்களுள் சிவில் சமூகப் பிரதிநிதிகள் உள்ளடக்கப்படவில்லை. | (......) |
| 29. | 1978ஆம் ஆண்டு அரசியலமைப்பின்படி பாராளுமன்ற அமர்வுகளை முடிவுறுத்துவதற்கான அதிகாரத்தை சபாநாயகர் கொண்டுள்ளார். | பாராளுமன்றத்தைக் கலைக்கின்றபோது அடுத்த பாராளுமன்றத் தேர்தலுக்கான திகதியை நிர்ணயிக்க வேண்டிய கட்டாயம் ஜனாதிபதிக்கு இல்லை. | (......) |
| 30. | 1978ஆம் ஆண்டு அரசியலமைப்பின் 13ஆம் திருத்தத்தின்படி மாகாண ஆளுநர் மாகாணசபையின் முதலமைச்சரினால் நியமிக்கப்படுகின்றார். | மாகாணசபையின் அமைச்சர்கள்சபைக்கு உறுப்பினர்களை நியமிக்கும் அதிகாரம் முதலமைச்சருக்கு உண்டு. | (......) |

Department of Examinations - Sri Lanka

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

අ.පො.ස (උ.පෙළ) විභාගය / க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை - 2021 (2022)

විෂය අංකය / பாட இலக்கம்: **23**

විෂයය / பாடம்: **அரசியல் விஞ்ஞானம்**

## ලකුණු දීමේ පටිපාටිය / புள்ளி வழங்கும் திட்டம்
I පත්‍රය / பத்திரம் I

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|
| 01. | 4 | 11. | 3 | 21. | 1 |
| 02. | 3 | 12. | 2 | 22. | 4 |
| 03. | 5 | 13. | 3 | 23. | 5 |
| 04. | 4 | 14. | 2 | 24. | 2 |
| 05. | 4 | 15. | 2 | 25. | 3 |
| 06. | 2 | 16. | 3 | 26. | 2 |
| 07. | 4 | 17. | 5 | 27. | 1 |
| 08. | 1 | 18. | 1 | 28. | 5 |
| 09. | 2 | 19. | 3 | 29. | 4 |
| 10. | 1 | 20. | 3 | 30. | 4 |

✪ විශේෂ උපදෙස් / விசேட அறிவுறுத்தல் :

එක් පිළිතුරකට / ஒரு சரியான விடைக்கு 02 ලකුණු බැගින් / புள்ளி வீதம்

මුළු ලකුණු / மொத்தப் புள்ளிகள் 2 x 30 = 60

Department of Examinations - Sri Lanka

## பகுதி II

**31.** அரசியலைக் கற்பதற்கான ஒப்பீட்டு அணுகுமுறை மூன்று மரபுகளைக் கொண்டுள்ளது. அவற்றில் **இரண்டினைத்** தருக.

(1) ..............................................................................................

(2) ..............................................................................................

**32.** உலகில் அரசியல் கட்சி முறைகள் பல காணப்படுகின்றன. அவற்றில் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(1) ..............................................................................................

(2) ..............................................................................................

**33.** அரசியல் மற்றும் சமூகக் கோட்பாடுகளில் சிவில் சமூகம் என்ற எண்ணக்கரு நான்கு அர்த்தங்களில் பயன்படுத்தப்படுகின்றது. அவற்றில் **இரண்டினைத்** தருக.

(1) ..............................................................................................

(2) ..............................................................................................

**34.** அரசு என்பது சமூகத்தில் காணப்படும் மிக உயர்ந்த மனித அமைப்பாகும் என்ற கருத்து அரசியல் கோட்பாட்டில் இரண்டு விளக்கங்களைக் கொண்டுள்ளதுடன், அவை இரண்டு சிந்தனையாளர்களுடன் அடையாளப்படுத்தப்படுகின்றன. அவ் விளக்கங்கள் **இரண்டும்** யாவை?

(1) ..............................................................................................

(2) ..............................................................................................

**35.** (1) பெண்களை அரசியலில் இருந்து ஒதுக்கி வைப்பதனைக் கேள்விக்குட்படுத்தும் அரசியல் அணுகுமுறை எது?

..............................................................................................

(2) பொருளாதார மற்றும் சமூக வர்க்கத்தின் அடிப்படையிலேயே அரசியல் தீர்மானிக்கப்படுகின்றது என்பதனை வலியுறுத்தும் அரசியல் அணுகுமுறை யாது?

..............................................................................................

**36.** (1) சட்டம் சகலருக்கும் சமமாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதனை வலியுறுத்தும் சட்டத்தின் ஆட்சியின் (rule of law) ஒரு பகுதியாகக் காணப்படும் ஜனநாயக தத்துவம் யாது?

..............................................................................................

(2) அரசாங்கத்தின் அதிகாரம் குறித்தவொரு நிறுவனத்தில் குவிமையப்படுத்தப்படுவதனைத் தடுப்பதற்கு ஜனநாயக ஆட்சிமுறைகளில் பயன்படுத்தப்படும் தத்துவம் எது?

..............................................................................................

**37.** (1) இந்தியாவின் அரசாங்க முறை எத்தகைய அரசியலமைப்பு மாதிரியினைக் கொண்டுள்ளது?

..............................................................................................

(2) பிரான்சின் அரசாங்க முறை எத்தகைய அரசியலமைப்பு மாதிரியினைக் கொண்டுள்ளது?

..............................................................................................

**38.** பணியகவமைப்பு தொடர்பான மெக்ஸ் வெபரின் கோட்பாட்டில் மூன்று அதிகாரத்துவ முறைகள் காணப்படுகின்றன. அவற்றில் **இரண்டினைத்** தருக.

(1) ..............................................................................................

(2) ..............................................................................................

Department of Examinations Sri Lanka

**39.** (1) இலங்கையில் மக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கம் எந்த ஆண்டில் பதவிக்கு வந்தது?

.......................................................................................................................................

(2) இலங்கையின் 1978ஆம் ஆண்டு அரசியலமைப்புக்கான 20ஆம் திருத்தம் எந்த ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது?

.......................................................................................................................................

**40.** 1833ஆம் ஆண்டு இலங்கையின் அரசாங்க முறை, நீதி நிர்வாகம் என்பவற்றில் மறுசீரமைப்புக்களை முன்வைத்த ஆணைக்குழுவின் **இரண்டு** உறுப்பினர்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

(1) .......................................................................................................................................

(2) .......................................................................................................................................

**41.** இலங்கையின் 1978ஆம் ஆண்டு அரசியலமைப்பின் 13ஆம் திருத்தத்தில் அதிகார பரவலாக்க முறையின்படி அதிகாரங்கள் மூன்று பட்டியல்களில் காணப்படுகின்றன. அவற்றில் **இரண்டினைத்** தருக.

(1) .......................................................................................................................................

(2) .......................................................................................................................................

**42.** அரசின் இறைமை அதிகாரத்தின் **இரண்டு** வகைகளைக் குறிப்பிடுக.

(1) .......................................................................................................................................

(2) .......................................................................................................................................

**43.** 1947ஆம் ஆண்டு சோல்பரி அரசியலமைப்பின் இலங்கை பாராளுமன்றம் மூன்று நிறுவனங்களைக் கொண்டிருந்தது. அவற்றில் ஒன்று சனப்பிரதிநிதிகள் சபை ஆகும். ஏனைய **இரண்டு** நிறுவனங்களையும் குறிப்பிடுக.

(1) .......................................................................................................................................

(2) .......................................................................................................................................

**44.** (1) நவீன தேசிய அரசு முறையின் தோற்றம் 17ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் கைச்சாத்திடப்பட்ட சமாதான உடன்படிக்கையை அடிப்படையாகக் கொண்டிருந்தது. அவ்வுடன்படிக்கையின் பெயரைக் குறிப்பிடுக.

.......................................................................................................................................

(2) சிறிய அரசுகள் வல்லரசு சக்திகள் தொடர்பாக நடுநிலைமையினைப் பேணவேண்டும் என வலியுறுத்தும் வெளிநாட்டுக் கொள்கை அணுகுமுறையின் பெயர் யாது?

.......................................................................................................................................

**45.** (1) உலக முறைமை **இரு** அதிகார முகாம்களைப் பிரிந்து இருப்பதனை விவரிக்கின்ற எண்ணக்கரு யாது?

.......................................................................................................................................

(2) உலக முறைமையினை **ஒரு** தனி உலக அதிகார முகாம் என விவரிக்கின்ற எண்ணக்கரு யாது?

.......................................................................................................................................

**46.** மோதலைத் தடுப்பதற்கு **இரண்டு** வழிமுறைகள் காணப்படுகின்றன. அவை யாவை?

(1) .......................................................................................................................................

(2) .......................................................................................................................................

Department of Examinations - Sri Lanka

47. பொதுக் கொள்கைக் கற்கையானது **இரண்டு** வடிவங்களைக் கொண்டுள்ளது. அவற்றைக் குறிப்பிடுக.

(1) ..............................................................................................................

(2) ..............................................................................................................

48. (1) அரசு இல்லாத நிலையில் காணப்பட்ட மானிட வாழ்க்கையினை விவரிக்க சமூக ஒப்பந்தக் கோட்பாட்டில் பயன்படுத்தப்பட்ட எண்ணக்கரு யாது?

..............................................................................................................

(2) தாராண்மைவாத அரசியல் கோட்பாட்டினை ஆரம்பித்துவைத்த அரசியல் சிந்தனையாளரின் பெயரைக் குறிப்பிடுக.

..............................................................................................................

49. (1) அரசினை வழிபடுவதனை வலியுறுத்திய 20ஆம் நூற்றாண்டின் அரசியல் கருத்தியல் எது?

..............................................................................................................

(2) தோமஸ் ஹொப்ஸினால் எழுதப்பட்ட அரசியல் கோட்பாடு தொடர்பான நூல் எது?

..............................................................................................................

50. ஒரு கருத்தியல் என்ற வகையில் தேசியவாதத்தினை மூன்று அணுகுமுறைகளின் கீழ் விளங்கிக்கொள்ள முடியும். அவற்றில் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(1) ..............................................................................................................

(2) ..............................................................................................................

* * *

Department of Examinations - Sri Lanka

# பகுதி B

## 31 - 50 வரையுள்ள ஒவ்வொரு குறு வினாவுக்குமுரிய விடைகள்

**வினா இல : 31**

1. மரபு ரீதியான ஒப்பீட்டு அணுகுமுறை / பழைமை ஒப்பீட்டு அணுகுமுறை / பாரம்பரிய ஒப்பீட்டு அணுகுமுறை
2. 20ம் நூற்றாண்டு ஒப்பீட்டு அணுகுமுறை
3. சமகால ஒப்பீட்டு அணுகுமுறை

**வினா இல : 32**

1. ஒரு கட்சிமுறை / தனிக்கட்சி முறை
2. இரு கட்சி முறை
3. ஆதிக்கத் தனிக்கட்சி முறை
4. ஆதிக்க இரு கட்சி முறை
5. பல கட்சி முறை

**வினா இல : 33**

1. மரபு ரீதியான தாராள விளக்கம் / பழைமை
2. மரபு ரீதியான மார்க்சிச விளக்கம் / பழைமை
3. ஒன்றிணைந்த / ஒருங்கிணைந்த ஜனநாயக விளக்கம்
4. நவ-மார்க்சிச கிரம்சிய விளக்கம் / புதிய மார்க்சிச கிரம்சிய விளக்கம்

**வினா இல : 34**

1. அரிஸ்டோட்டிலியன் விளக்கம் / அரிஸ்டோட்டில்
2. வெபேரியன் விளக்கம் / மெக்ஸ் வெபர்

**வினா இல : 35**

1. பெண்ணியல்வாத அணுகுமுறை / பெண்ணியல்வாதம் / பெண்ணியம்
2. மார்க்சிச அணுகுமுறை / அரசியல் பொருளாதார அணுகுமுறை / வரலாற்று பொருள்முதல்வாதம் / சோசலிச அணுகுமுறை

**வினா இல : 36**

1. சட்டத்தின் முன் அனைவரும் சமம் / சட்டம் ஆள்வோர் - ஆளப்படுவோருக்கு சமமாக பிரயோகிக்கப்படுகின்றது / சட்டத்தை சகலருக்கும் சமமாக நடைமுறைப்படுத்தல்
2. அதிகார பிரிவினை / வலுவேறாக்கம் / அதிகார வேறாக்கம்.



Department of Examinations - Sri Lanka

**வினா இல : 37**

1. பாதி சமஷ்டி / அர்த்த சமஷ்டி / அரைகுறை சமஷ்டி
2. ஒற்றையாட்சி மற்றும் மத்தியமயப்படுத்தப்பட்ட ஆட்சிமுறை / ஒற்றையாட்சி

**வினா இல : 38**

1. மரபு ரீதியான அதிகார முறைமை
2. கவர்ச்சிகரமான அதிகார முறைமை / வசீகரமான அதிகார முறைமை
3. சட்டவியல் அதிகார முறைமை / சட்ட பகுத்தறிவு ரீதியான அணுகுமுறை

**வினா இல : 39**

1. 1956
2. 2020

**வினா இல : 40**

1. வில்லியம் கோல்புரூக் / கோல்புரூக்
2. சார்ல்ஸ் கெமரன் / கெமரன்

**வினா இல : 41**

1. மாகாணப்பட்டியல் / மாகாண சபைப்பட்டியல்
2. ஒத்தியங்குப்பட்டியல் / இணைப்புப்பட்டியல் / இணைந்த பட்டியல்
3. ஒதுக்கியப்பட்டியல் / மத்தியப்பட்டியல்

**வினா இல : 42**

1. உள்ளக இறைமை / உள் இறைமை
2. வெளி இறைமை

**வினா இல : 43**

1. மகாதேசாதிபதி / முடி / ஆளுநர் நாயகம்
2. செனெட் / மேல் சபை / இரண்டாம் சபை (மன்றம்) / மேலவை

Department of Examinations - Sri Lanka

**வினா இல : 44**

1. வெஸ்ட்பெலியா / வெஸ்ட்பாலியா
2. அணிசேராக் கொள்கை

**வினா இல : 45**

1. இரு துருவ உலக முறைமை / இரு துருவம்
2. ஒரு துருவ உலக முறைமை / ஒரு துருவம்

**வினா இல : 46**

1. சுமாராக தடுத்தல்
2. ஆழமாக தடுத்தல் (தவிர்த்தல்)

**வினா இல : 47**

1. பொதுக் கொள்கையின் கற்கை / கொள்கைகள் கற்கை
2. பொதுக் கொள்கையினுள் கற்கை

**வினா இல : 48**

1. இயற்கை நிலை
2. ஜோன் லொக் / லொக்

**வினா இல : 49**

1. பாசிசம் / நாசிசம் / பாசிசவாதம்
2. லெவியதான் / லெவாயதன்

**வினா இல : 50**

1. நவீன அணுகுமுறை
2. மரபு ரீதியான அணுகுமுறை
3. கருவிவாத அணுகுமுறை

Department of Examinations - Sri Lanka

# அரசியல் விஞ்ஞானம் II
## பகுதி I

**வினா இலக்கம் 01 :**

**அரசியலைக் கற்பதற்கான சமூகவியல் அனுகுமுறையினை விவரிக்குக.**

**(20 புள்ளிகள்)**

**அறிமுகம் (03 புள்ளிகள்)**

- அரசறிவியலைக் கற்பதற்கு பல்வேறு அணுகுமுறைகள் காணப்படுகின்றன. அவற்றுள் சமூகவியல் அணுகுமுறை முக்கியமான ஒன்றாகும்.
- அரசறிவியலும் சமூகவியலும் நெருங்கிய தொடர்புடைய இரு கற்கைத் துறைகள் என்பதால் அவை தொடர்ந்து நெருங்கிய உறவைப் பேணி வருகின்றன.
- அரசறிவியல் மற்றும் சமூகவியல் ஆகிய இரண்டினையும் இணைக்கின்ற உப கற்கைத் துறையாக அரசியல் சமூகவியல் காணப்படுகின்றது.

**உள்ளடக்கம் (15 புள்ளிகள்)**

- அரசறிவியல் ஆய்வு சமூகவியல் ஆய்வு முறைகளினால் வலுப்படுத்தப்பட்டுள்ளது.
- 19 ஆம் நூற்றாண்டின் சமூகவியற் கோட்பாட்டாளர்களான ஆகஸ்ட் காம்டே, கார்ல் மார்க்ஸ் மற்றும் மெக்ஸ் வெபர் ஆகியோர் இந்த அணுகுமுறையின் முன்னோடிகளாக இருந்தனர்.
- 20 ஆம் நூற்றாண்டின் அரைப்பகுதியில் சமூகவியல் ஆய்வுக்கான பிராங்க்பர்ட் சிந்தனை பள்ளி சமூக வியல் அணுகுமுறையோடு தொடர்புடைய தலைப்புக்களில் ஆய்வுகளை மேற்கொண்டது.
- நவீன அரசறிவியல் ஆய்வு முறை மானுடவியல் மற்றும் சமூகவியல் என்பவற்றின் தாக்கத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளது.
- சமூகவியல் ஆய்வு சமூக கட்டமைப்புகள், சமூக ஒழுங்கமைப்பு, சமூக அலகுகள், மனிதர்களுக் கும் சமூகத்திற்கும் இடையிலான உறவுகள், சமூக அடுக்கு முறை மற்றும் சமூக நிலைமாற்றம் ஆகியவற்றைப் புரிந்துகொள்ள முயல்கிறது.

Department of Examinations - Sri Lanka

- அரசியல் விஞ்ஞானிகளுக்கு அரசியற் கட்சிகள் மற்றும் அவற்றின் சமூக அடிப்படைகள், வாக்காளர்களின் தேர்தல் நடத்தை, அரசியலில் தாக்கத்தை ஏற்படுத்தும் சமூக மோதல்கள், அரசியல் அதிகாரத்தின் சமூக மற்றும் வர்க்க அடிப்படைகள், வர்க்கம் மற்றும் சாதி மோதல்கள் பற்றிய விடயங்களில் பரந்த புரிதலைப் பெறுவதற்கு சமூகவியல் அணுகுமுறை மிகவும் பயனுடையதாக இருக்கும்.

- சமூகவியல் அணுகுமுறை குடிமக்கள் ஏன் அரசியலில் பங்கேற்கிறார்கள்?, சமூகத்தில் எந்த சமூக அல்லது வர்க்கக் குழுக்கள் உண்மையில் அரசியல் அதிகாரத்தை வைத்திருக்கின்றன? குடி மக்களின் அரசியல் பங்கேற்பை செல்வம், சாதி, வர்க்கம், குடும்பம் மற்றும் பால்நிலை போன்ற காரணிகள் எவ்வாறு வடிவமைக்கின்றன? அரசியல் கட்சிகள் எத்தகைய சமூக நலன்களைப் பிரதி நிதித்துவப்படுத்துகின்றன? போன்ற கேள்விகளுக்கு இவ் அணுகுமுறை விடைகாண முயல்கின்றது.

**முடிவுரை** **(02 புள்ளிகள்)**

- மாணவர்கள் சமூகவியல் அணுகுமுறையின் நன்மைகள் மற்றும் மட்டுப்பாடுகளைச் சுட்டிக் காட்டி விடையை முடிக்கலாம். இவ்வணுகுமுறை அரசியல் விஞ்ஞானிகள் அரசியலில் இடம்பெறும் சமூகத்தளத்திற்கு செல்ல உதவுகிறது. அரசியல் சமூகவியல் அரசறிவியல் ஆய்வுகளுக்கு கள ஆய்வு நுட்ப முறை உள்வாங்கப்படுவதற்கு வழிசெய்துள்ளது.

- இந்த அணுகுமுறை சமூக அம்சங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க முயல்வதால் அரசறி வியலின் தனித்துவம் கீழ்நிலைப்படுத்தப்படுகிறது போன்ற விமர்சனமும் முன்வைக்கப்படுகின்றது.

**(02 புள்ளிகள்)**

Department of Examinations - Sri Lanka

**வினா இலக்கம் 02 :**

**i. அரசியற் கருத்தியல் என்ற எண்ணக்கருவை வரையறை செய்க. (05 புள்ளிகள்)**

- அரசியற் கருத்தியல்கள் புராதன கிரேக்கம், இந்திய மற்றும் சீன அரசியல் பரிசீலனையின் ஆரம்ப நாட்களுக்கு பின்நோக்கி செல்லுமளவுக்கு நீண்ட வரலாற்றைக் கொண்டிருக்கின்றன.

- 'கருத்தியல்' என்ற எண்ணக்கரு முதலில் 18ம் நூற்றாண்டில் பிரான்சில் பயன்படுத்தப்பட்டது.

- நவீன அரசியற் கருத்தியல்கள் ஐரோப்பாவில் ஐரோப்பிய சமூகங்களில் இடம்பெற்ற சமூக, பொருளாதார மற்றும் அரசியல் மாற்றங்களின் பின்னணியில் வளர்ச்சியடையத் தொடங்கின.

- ஒரு அரசியற் கருத்தியல்
  அ. அரசியல் செயன்முறையில் செல்வாக்குச் செலுத்துகின்றது.
  ஆ. அரசியற் செயற்பாட்டிலும் மாற்றத்திலும் தாக்கம் செலுத்துகின்றது.
  இ. ஒரு சமூகத்திலுள்ள அதிக மக்களைக் கவர்ந்திழுக்கின்ற திறனைக் கொண்டிருக்கின்றது.
  ஈ. அரசியல் நம்பிக்கை மற்றும் கருத்துக்களின் தொகுப்பாக இருக்கின்றது.

- அரசியற் கருத்தியலின் பொதுவான இயல்புகள்
  அ. ஒன்றுக்கொன்று பொருந்தக்கூடிய அரசியற் கருத்துக்களினை உள்ளடக்கியுள்ளது.
  ஆ. சமூகக் குழுக்களின் அரசியல் எண்ணப்பாங்கு, நம்பிக்கை மற்றும் நோக்குநிலை என்பவற்றை வடிவமைக்கின்ற திறனைக் கொண்டிருக்கின்றது.
  இ. வேறுபட்ட சமூகக் குழுக்களின் அரசியற் செயற்பாட்டிற்கான வழிகாட்டியாக இருக்கின்றது.

- அரசியற் கருத்தியல்களுக்கு உதாரணமாக தாராண்மைவாதம், சோசலிசம், தேசியவாதம், ஜன நாயகம், சமூக ஜனநாயகம், பாசிசம், பெண்ணியம் போன்றவை குறிப்பிடப்படுகின்றன.

Department of Examinations - Sri Lanka

ii. ஓர் அரசியற் கருத்தியல் என்ற வகையில் சோசலிசத்தினை விவரிக்குக. (15 புள்ளிகள்)

**அறிமுகம்** (02 புள்ளிகள்)

- ஐரோப்பாவில் 19ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் சோசலிச சிந்தனை பரவத் தொடங்கியது. இதனுடைய அடிப்படை நம்பிக்கையாக பொதுச்சொத்துரிமையும் சமூக சமத்துவமும் காணப்படுகின்றது.

- நவீன சோசலிசம் 19ம் நூற்றாண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் தோற்றம் பெற்று பின்னர் ஒரு அரசியற் கருத்தியலாக வளர்ச்சியடைந்துள்ளது.

- இது தாராண்மைவாதம் மற்றும் முதலாளித்துவத்திற்கான ஒரு மாற்றீடாக முன்வைக்கப்பட்டது.

- சோசலிசத்தின் பிரதான அம்சங்களாக முதலாளித்துவத்தை இல்லாதொழித்தல், வர்க்க வேறுபாட்டையும் சமூக வர்க்கங்களையும் இல்லாதொழித்தல், பொருளாதார மற்றும் சமூக சமத்துவம், பொதுச் சொத்துரிமை என்பன குறிப்பிடப்படுகின்றது.

- மார்க்சிசத்தின் காரணமாக சோசலிசம் ஒரு சக்திமிக்க அரசியல் கருத்தாகியது.

**உள்ளடக்கம்** (11 புள்ளிகள்)

- சோசலிசக் கருத்தியலின் அபிவிருத்தியில் இரண்டு படிமுறைகள் காணப்படுகின்றன. (அ) 18ம் நூற்றாண்டின் பிற்பகுதி மற்றும் 19ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் சமூகப் பொதுச் சொத்துரிமை தொடர்பான ஒரு பொதுவான கருத்து வளர்ச்சியடைந்தமை. (ஆ) கார்ல் மாக்ஸ் மற்றும் ஏங்கெல்ஸ் ஆகியோரால் முன்வைக்கப்பட்ட மார்க்சிசத்தின் செல்வாக்கின் கீழ் “விஞ்ஞான சோசலிசக்” கருத்துக்கள் வளர்ச்சியடைந்தமை.

- 1848ல் பிரசுரிக்கப்பட்ட “கம்யூனிசக் அறிக்கையில்” கார்ல் மாக்ஸ் மற்றும் ஏங்கல்ஸ் போன்றவர்களினால் சோசலிசக் கோட்பாடு முதலில் அபிவிருத்தி செய்யப்பட்டது.

- சோசலிசக் கருத்தியலின் உள்ளடக்கம்
  1. தனியார் சொத்துரிமை முறைமைக்கு மாற்றீடாக சமூகப் பொதுச் சொத்துரிமை முறைமையினை ஏற்படுத்தல்.
  2. சமூக வர்க்கங்களை ஒழித்ததன் பின்னர் ஒரு வர்க்கமற்ற சமூகத்தை உருவாக்குதல்.
  3. சோசலிசக் கோட்பாட்டின்படி அரசானது சமூகத்திலுள்ள சிறுபான்மை சொத்துடைமையாளர்களின் வர்க்க நலனை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.
  4. சோசலிசக் கோட்பாட்டின்படி தொழிலாளர்கள் சுரண்டப்படுவதை உறுதிப்படுத்துகின்ற அரசியல் நிறுவனமாகவும் அரசு காணப்படுகின்றது.

Department of Examinations - Sri Lanka

5. அரசு சுரண்டலுக்கான ஒரு கருவியாக இருப்பதால் அது ஒழிக்கப்பட வேண்டும் என சோசலிசம் வாதிடுகின்றது.
6. இது பொருளாதார மற்றும் சமூக சமத்துவத்தை வலியுறுத்துகின்றது. ஆகையால் இங்கு எல்லோரும் வேறுபாடுகளற்ற சமூக மற்றும் பொருளாதார சூழலில் வாழக்கூடிய நிலை காணப்படும்.
7. 20ம் நூற்றாண்டில் சோசலிசம் ஒரு செல்வாக்குமிக்க அரசியற் கருத்தியலாகக் காணப்பட்டது.
8. 20ம் நூற்றாண்டில் புரட்சிகர சோசலிசத்திற்கு சமாந்தரமாக “மூன்றாம் உலக சோசலிசத்தின்” பல வகைகள் வளர்ச்சியடைந்தன.

**முடிவுரை** **(02 புள்ளிகள்)**

- ஒரு அரசியற் கருத்தியலாக சோசலிசத்தின் தனித்துவமான இயல்பை எடுத்து விளக்குதல்.
- இது சமூகத்தில் அரசினால் தோற்றுவிக்கப்படுகின்ற வர்க்க வேறுபாட்டையும் மற்றும் சமூக வர்க்கங்களையும் ஒழிப்பதனை வலியுறுத்துகின்றது.
- சோசலிசம் மட்டுமே சமூக மற்றும் பொருளாதார சமத்துவத்தை வலியுறுத்துகின்ற கருத்தியலாகக் காணப்படுகின்றது.

Department of Examinations - Sri Lanka

**வினா இலக்கம் 03 :**

**i. அரசு என்ற எண்ணக்கருவினை வரையறை செய்க? (05 புள்ளிகள்)**

- அரசு என்பது ஒரு அரசியல் நிறுவனம். அது பல்வேறுபட்ட வரலாற்று மற்றும் சமூக சூழ்நிலைகளின் ஊடாக பரிணாம வளர்ச்சி பெற்று வந்துள்ளது.

- வேறுபட்ட வரலாற்று சூழமைவுகளின் காரணமாக அரசின் தன்மையும் மாற்றமடைந்துள்ளது.

- சமூகத்தின் அரசியல் மற்றும் சமூக அதிகாரத்தினை வெளிப்படுத்தும் இறுதியான நிறுவனம் அரசாகும். அது அரசியல் அதிகாரத்தினை சமூகத்தில் பிரயோகிப்பதற்காக பல்வேறு கட்டமைப்புக ளையும் நிறுவனங்களையும் கொண்டுள்ளது.

- நவீன ஆள்புல அரசுகள் பின்வரும் கூறுகளை அடிப்படையாகக் கொண்டு ஒழுங்கமைத்துள்ளன. அவை
  1. வரையறுக்கப்பட்ட ஆள்புலம்
  2. தேசிய அடிப்படை
  3. இறைமை
  4. அரசாங்கம்

- அரசு தொடர்பாக வேறுபட்ட அறிஞர்கள் முன்வைத்த வரைவிலக்கணங்களையும் மாணவர்கள் குறிப் பிடலாம்.

**ii. சமூகத்தில் அரசின் வகிபங்கை விளக்குக? (10 புள்ளிகள்)**

**அறிமுகம் (01 புள்ளி)**

அரசும் சமூகமும் பரஸ்பரம் ஒன்றில் ஒன்று தங்கியிருக்கும் உறவினைக் கொண்டவை.

- அரசில்லாமல் ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட சமூகத்தினை உருவாக்க முடியாது.

- அரசு சமூகத்தின் அரசியல் அதிகாரத்தின் மத்திய நிறுவனமாகும்.

**உள்ளடக்கம் (08 புள்ளிகள்)**

- அரசு சமூகத்தை ஆளுகை செய்வதற்காக பல கட்டமைப்புகளையும் நிறுவனங்களையும் கொண்டுள்ளது.

- சமூகத்தில் அரசின் வகிபங்கு பரந்துபட்டதும் சிக்கல் மிக்கதுமாகும்.

Department of Examinations - Sri Lanka

- சமூகத்தில் அரசின் பணிகளை பின்வருமாறு நோக்கலாம்.

  1. சமூகத்தில் சட்டம், சமூக ஒழுங்கு மற்றும் சொத்துக்களை பாதுகாப்பது அரசின் பிரதான பணியாகும்.

- அது பொருளாதாரத்தினை சரியான திசையில் கொண்டு செல்வதுடன், அதனை சரியாக முகாமை செய்கின்றது.

- சமூகக் கட்டுப்பாடு, வழிப்படுத்தல் மற்றும் சமூக செயற்பாடுகளை மேற்பார்வை செய்தல் என்பன அரசின் பணியாகும்.

- அரசின் பிரதானமான பணி சமூகத்தில் சட்டத்தினையும் ஒழுங்கினையும் நிலைநாட்டுவதாகும்.

- போர் மற்றும் சமாதானத்தினை பிரகடனம் செய்வது அரசின் பிறிதொரு முக்கிய பணியாகும்.

- சமூகத்தில் அரசின் வகிபங்கு தொடர்பாக ஆராயும்போது அரிஸ்டோட்டில் மற்றும் மெக்ஸ் வெபர் ஆகியோரின் கோட்பாடுகள் (விளக்கங்கள்) முக்கியமானதாக அமைகின்றன.

- சமூகத்தில் வன்முறையினை திணிக்கும் தனிமுதன்மை அதிகாரம் அரசுக்கு உண்டு.

**முடிவுரை** **(01 புள்ளி)**

- அரசு சமூகத்தின் ஒருமைப்பாடு மற்றும் தொடர்ச்சியினை பேணிப்பாதுகாக்கின்றது.

- அரசில்லாத சமூகத்தின் நிலை என்ன மற்றும் அரசு ஒன்று காணப்படும் சமூகத்தின் நிலை என்ன என்பதனை சிந்திப்பதன் மூலம் அரசின் வகிபங்கினை விளங்கிக்கொள்ளமுடியும்.

**iii. அரசாங்கம் அரசில் இருந்து எவ்வாறு வேறுபடுகின்றது?** **(05 புள்ளிகள்)**

- அரசும் அரசாங்கமும் இணைந்திருந்தாலும், அவை வேறுபட்ட நிறுவனங்களாகும்.

- அரசு என்பது நிலையான மற்றும் ஒப்பீட்டளவில் நிரந்தரமான நிறுவனமாகும். ஆனால் அரசாங்கம் காலத்துக்கு காலம் மாற்றமடைகின்றது.

- ஜனநாயகம் தோற்றம் பெறுவதற்கு முன்னர் காணப்பட்ட சமூகங்களில் அரசு மற்றும் அரசாங்கம் என்பவற்றிற்கிடையில் வேறுபாடுகள் இருந்தமைக்கான ஆதாரங்கள் இல்லை.

- அரசினை உருவாக்குவதில் அல்லது அரசின் கூறுகளில் ஒரு அங்கம் மாத்திரமே அரசாங்கம் ஆகும்.

- அரசின் சார்பாக இறைமை அதிகாரத்தினை பிரயோகிக்கும் நிறுவனம் அரசாங்கமாகும்.
- அரசாங்கம் சமூகத்தின் ஒரு சில பிரிவினரின் நலன்களை பாதுகாக்க செயற்படும். ஆயினும் அரசு சமூகத்தின் பொது நோக்கம் மற்றும் விருப்பத்தினை பிரதிநிதித்துவம் செய்யும்.

# பகுதி II

**வினா இலக்கம் 04 :**

**i. இலங்கையில் பிரித்தானிய காலனித்துவ ஆட்சியின் கீழ் இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நிலைமாற்றத்தினை சுருக்கமாக ஆராய்க? (10 புள்ளிகள்)**

**அறிமுகம் (01 புள்ளி)**

போர்த்துக்கேயர் மற்றும் ஒல்லாந்தரின் ஆட்சியின் கீழ் ஏற்பட்ட பொருளாதார மற்றும் சமூக நிலை மாற்றங்களை விட பிரித்தானிய காலனித்துவ ஆட்சியின்கீழ் இடம்பெற்ற மாற்றங்கள் பெரியளவிலான தாக்கத்தினை ஏற்படுத்தின. இதற்கு இரண்டு பிரதான காரணங்கள் உள்ளன. முதலாவது பிரித்தானியர் ஒரு முறைமைக்குட்பட்ட காலனித்துவ மயமாக்க செயற்திட்டத்தின் கீழ் திட்டமிட்ட வகையில் தமது நலன்களை இலக்காகக் கொண்டு பொருளாதார சமூக, அரசியல் நிலைமாற்றத்தினை ஏற்படுத்தும் வகையிலான கொள்கையினைக் கொண்டிருந்தனர். இரண்டாவது காரணம் பிரித்தானியர் கரையோர பிரதேசங்களை மாத்தி ரமன்றி முழு நாட்டினையும் ஆட்சி செய்தனர்.

**உள்ளடக்கம் (08 புள்ளிகள்)**

**பொருளாதார நிலைமாற்றத்தின் பிரதான போக்குகளும் விளைவுகளும்**

- காலனித்துவ முதலாளித்துவ பொருளாதார முறையின் ஊடாக பெருந்தோட்டக் கைத்தொழில் மற்றும் ஏற்றுமதிப் பொருளாதாரம் அறிமுகம் செய்யபட்டமை. முன்னைய காலனித்துவ ஆட்சியாளர்களின் கீழ் விவசாய பொருளாதாரத்தினைக் கொண்ட மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட ஏற்றுமதி வர்த்தகத்தினைக் கொண்ட சமூகமொன்றே இலங்கையில் காணப்பட்டது.

- ஏற்றுமதி விவசாயப் பொருளாதாரம் மற்றும் ஏற்றுமதி வர்த்தகத்தினைக் கொண்டதொரு நவீன முதாலாளித்துவ பொருளாதாரத்துக்கான அடித்தளத்தினை இட்டது.

- முதன்நிலை பொருட்களை உற்பத்தி செய்யும் நாடு என்ற வகையில் இலங்கைப் பொருளாதாரம் நேரடி யாக ஐரோப்பிய ஏற்றுமதி சந்தை மற்றும் உலக சந்தையுடன் இணைக்கப்பட்டது.

- இலங்கையின் பொருளாதாரம் உலகப்பொருளாதாரத்தின் செல்வாக்குக்கு உட்படும் வகையில் ஏற்று மதி இறக்குமதி பொருளாதாரம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது.

- தொழில் சந்தையொன்று அறிமுகம் செய்யப்பட்டது. இந்த மாற்றத்திற்கான அடித்தளம் கோல்புரூக் கெமரன் ஆணைக்குழுவினால் இராஜகாரிய முறைமை ஒழிக்கப்பட்ட பின்னர் இடப்பட்டது.

- பெருந்தோட்ட மற்றும் வர்த்தகப் பொருளாதாரங்கள் வளர்ச்சியடைய ஆரம்பித்த பின்னர், அதனோடு இணைந்த வகையில் வர்த்தகம், ஊழியம், போக்குவரத்து, ஒப்பந்தங்கள், அகழ்வு மற்றும் மது

Department of Examinations - Sri Lanka

வர்த்தகம் என்பவற்றில் ஈடுபட்ட உள்ளூர் முயற்சியாளர் வகுப்பு ஒன்று உருவாகியது.

- பெருந்தோட்ட பொருளாதாரத்திற்கான அவசியமான மூலதனத்தினை உருவாக்கும் நோக்கில் வர்த்தக வங்கிமுறைமையொன்று ஆரம்பிக்கப்பட்டது.

- இறக்குமதி செய்யப்பட்ட ஊழியர்களைக் கொண்டதொரு நவீன ஏற்றுமதி பெருந்தோட்டத்துறை மற்றும் மரபுரீதியான விவசாயத்துறை என்பவற்றினைக் கொண்ட இரட்டைப் பொருளாதாரம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது.

- பெருந்தோட்ட ஏற்றுமதி பொருளாதாரத்தின் மூலம் கிடைத்த வருவாயுடன் நீண்டகாலம் நிலவிய தலையிடா வர்த்தக பொருளாதாரம் ஒரு சமூகநல அரசாங்கமாக நிலைமாற்றம் கண்டது.

- சிங்கள சமூகத்தின் கிராமிய விவசாயிகள் மத்தியில் ஏற்பட்ட நிலம் தொடர்பான பிரச்சினையினை சரி செய்வதற்காக விவசாய குடியேற்றத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

முடிவுரை (01 புள்ளிகள்)

**ii. பிரித்தானிய காலனித்துவ ஆட்சியின் கீழ் இலங்கையில் ஏற்பட்ட நிலைமாற்றத்தின் சமூக அம்சங்களை விபரிக்குக?** **(10 புள்ளிகள்)**

**அறிமுகம்** **(01 புள்ளி)**

**உள்ளடக்கம்** **(08 புள்ளிகள்)**

பிரித்தானிய காலனித்துவத்தின் கீழ் ஏற்பட்ட சமூக மாற்றங்களானது பொருளாதார நிலைமாற்றம் மற்றும் காலனித்துவ முதலாளித்துவ பொருளாதாரம் என்பவற்றின் நேரடி விளைவாகும்.

- நிலமானிய சமூக முறை மற்றும் அதனுள் காணபட்ட சாதிமுறைமை வீழ்ச்சியடைந்தமை.

- புதிய முதலாளித்துவ வகுப்பு ஒன்றும் மற்றும் சமூக கட்டமைப்பும் இருக்கின்ற நிலமானிய கட்டமைப்புக்கு சமாந்தரமாக எழுச்சி பெற்றது.

- காலனித்துவ முதலாளித்துவத்தின் கீழ் ஒருவகையான உள்ளூர் முதலாளித்துவ வகுப்பு, தொழிலாளர் வகுப்பு மற்றும் ஒரு மத்தியதர வகுப்பொன்றும் புதிய சமூக வகுப்புகளாக வளர்ச்சியடைந்தன.

- பெருந்தோட்ட பொருளாதாரம், ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகம் மற்றும் உள்ளூர் வர்த்தகத்துடன் இணைந்த வகையில் ஒருவகையான புதிய நகரமயமாக்கச் செயன்முறையொன்று இடம்பெற்றது.

Department of Examinations - Sri Lanka

- நகரமயமாக்கமானது மேற்கத்தேய கலாசாரம் மற்றும் புதிய கலாசார பழக்கவழக்கங்களுக்குட்பட்ட நகர சமூக வகுப்பொன்று தோற்றம் பெறுவதற்கு வழிசெய்தது.

- மேற்கத்தேய கலாசாரத்தின் செல்வாக்கு நகர சமூக குழுக்களிடையில் பரவியது.

- 19ம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் காலனித்துவ சிவில் சமூகமொன்று வளர்ச்சி பெற்றது. அது சிங்கள மற்றும் தமிழ் சமூகத்திலே காணப்பட்ட செயலூக்கம் கொண்ட பிரஜைகள் குழுக்களினை அடிப் படையாகக் கொண்டு காணப்பட்டதுடன், அவை காலனித்துவ சமூக, பொருளாதார மற்றும் கலாசார ஆதிக்கத்திற்கு எதிராக தமது எதிர்ப்பினையும் கருத்துக்களையும் வெளிப்படையாக தெரிவித்தன.

- இந்த சிவில் சமூக குழுக்கள் காலனித்துவ ஆதிக்கத்துக்கு எதிராக கலாசார தேசியத்துவ எதிர்ப்பினை வெளிப்படுத்துவதில் பெரிதும் முன்னின்று செயற்பட்டன.

**முடிவுரை** **(01 புள்ளி)**

- பிரித்தானிய காலனித்துவத்தின் கீழ் ஏற்பட்ட சமூக மாற்றங்கள் அவர்கள் ஆரம்பித்த பொருளாதார மற்றும் அரசியல் நிலைமாற்றங்களின் விளைவுகளாகும்.

- காலனித்துவ முதலாளித்துவ முறை தாபிக்கப்பட்டமையானது காலனித்துவக் காலத்தில் சமூக மாற்றங்கள் ஏற்படுவதற்கு பிரதான காரணமாக அமைந்தது.

- ஐரோப்பிய கலாசாரம் பரவியமையும் இச்செயன்முறைக்கு பங்களிப்பு செய்தது.

- காலனித்துவ ஆட்சியின்கீழ் ஏற்பட்ட பொருளாதார மற்றும் சமூக நிலைமாற்றங்களின் நன்மை–களை உள்ளூர் சமூகத்தின் உயர்குழாம் வகுப்பினர் அனுபவித்த அதேவேளை பெருந்தொகையான சாதாரண மக்கள் அப்பயன்களை அனுபவிக்க முடியாதிருந்தனர்.

Department of Examinations - Sri Lanka

**வினா இலக்கம் 05 :**

i. **சோல்பரி அரசியலமைப்பில் காணப்பட்ட சிறுபான்மை இனக் குழுக்களுக்கான உரிமைக் காப்பீட்டு ஏற்பாடுகளைச் சுருக்கமாக விபரிக்குக?** **(10 புள்ளிகள்)**

**அறிமுகம்** **(01 புள்ளி)**

**உள்ளடக்கம்** **(08 புள்ளிகள்)**

- பெரும்பான்மையினரின் ஆட்சியின் மூலம் உரிமைகள் மறுக்கப்படுவதற்கான சாத்தியபாடுகள் ஏற்படலாம் என்ற நோக்கில் இனத்துவ சிறுபான்மையினர் மற்றும் சிறுபான்மை மதத்தவர்களின் உரிமைகளையும் பாதுகாக்கும் வகையில் சோல்பரி அரசியலமைப்பு பல சிறுபான்மை காப்பீட்டு ஏற்பாடுகளைக் உள்ளடக்கியிருந்தது.

- பிரிவு 29 (2) : சிறுபான்மையினர் உரிமைக்காப்பீடுகளில் மிகவும் முக்கியமானதாக காணப்பட்டது. சிறுபான்மை இனத்தவர்களை மற்றும் மதத்தவர்களை பாகுபாடான சட்டங்களில் இருந்து பாதுகாப்பது இவ்வேற்பாட்டின் பிரதான நோக்கமாகக் காணப்பட்டது.

- பல் அங்கத்தவர் தேர்தல் தொகுதி : பெரும்பான்மையினர் ஆதிக்கம் செலுத்தும் மாவட்டங்களில் அல்லது பிரதேசங்களில் பிரதிநிதித்துவத்தினைப் பெற்றுக்கொள்ளமுடியாத சிறுபான்மை சமூகத்தவர்களுக்கு பிரதிநிதித்துவத்தினை வழங்கும் வகையில் இவ்வேற்பாடு அறிமுகப்படுத்தப்பட்டது.

- நியமன உறுப்பினர்கள் : ஜனப்பிரதிநிதிகள் சபைக்கு ஆறு நியமன உறுப்பினர்களை நியமிப்பதற்கான ஏற்பாடு காணப்பட்டது. எண்ணிக்கையில் குறைந்த, பிரதிநிதித்துவத்தினைப் பெற்றுக்கொள்ள முடியாத சிறுபான்மை சமூகங்களுக்கு பிரதிநிதித்துவத்தினை வழங்கும் வகையில் இவ்வேற்பாடு அறிமுகம் செய்யப்பட்டது.

- செனட்சபை : ஜனபிரதிநிதிகள் சபையில் எத்தகைய பிரதிநிதித்துவத்தினையும் பெற்றுக்கொள்ள முடியாத சிறுபான்மை சமூகங்களுக்கு செனட் சபையில் பிரதிநிதித்துவம் வழங்கபட்டது.

- இவை சுதந்திரத்துக்கு பின்னரான அரசாங்கமொன்றில் சிறுபான்மையினத்தவர்களின் உரிமைகளை பாதுகாப்பதற்காக அறிமுகம் செய்யப்பட்ட அரசியலமைப்பு ஏற்பாடுகள்.

- இவற்றைவிட பொதுச்சேவை ஆணைக்குழு, பிரிவுகவுன்சில் மற்றும் மகா தேசாதிபதி ஆகியோரும் சிறுபான்மையினர் காப்பீட்டு ஏற்பாடுகளாக கருதப்படுகின்றன.

Department of Examinations - Sri Lanka

## ii. மேலே குறிப்பிட்ட ஏற்பாடுகள் தமது நோக்கத்தினை அடைந்தனவா என்பதனை சுருக்கமாக ஆராய்க? (10 புள்ளிகள்)

**அறிமுகம்** (01 புள்ளி)

**உள்ளடக்கம்** (08 புள்ளிகள்)

இவ்வேற்பாடுகள் சிறுபான்மையினர் உரிமைகளைப் பாதுகாக்க தவறிவிட்டன என்பதனையே கடந்தகால அனுபவங்கள் எடுத்துகாட்டுகின்றன.

- பிரிவு 29( 1 ) இனது சட்டநிலை தெளிவற்றுக் காணப்பட்டமையினால் பாகுபாடான சட்டங்களில் இருந்து சிறுபான்மையினரை பாதுகாக்க தவறிவிட்டது. பெரும்பான்மையினத்தவர்களால் ஆதிக்கம் செலுத்தப்பட்ட பாராளுமன்றம் சட்டவாக்க அதிகாரத்தின் மீது திணிக்கப்படுகின்ற கட்டுப்பாடுகளை மிக சுலபமாக அலட்சியம் செய்தது. (1948 பிராஜவுரிமைச்சட்டம், 1956 மொழிச்சட்டம்)

- சிறுபான்மையினத்தவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காகவே செனட்சபை அறிமுகம் செய்யப்பட்டது. ஆயினும் செனட்டின் மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரங்கள் காரணமாக சிறுபான்மை மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதில் வினைத்திறன் கொண்ட சபையாக காணப்படவில்லை.

- சிறுபான்மை சமூகத்தில் இருந்து செனட் சபைக்கு உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டபோதும், அவ்வாறு நியமிக்கப்பட்டவர்கள் தம்மை நியமித்த கட்சி மற்றும் பிரதமருக்கு விசுவாசமாக இருந்தார்களே அன்றி, தமது சமூகத்தின் நலன்கள் மீது அதிக அக்கறை காட்டவில்லை.

- பல்அங்கத்தவர் தேர்தல் தொகுதி தமது நோக்கங்களை அடைந்து கொள்ள முடியாமல் போனமைக்கு இரண்டு காரணங்கள் காணப்பட்டன. (1) இத்தேர்தல் தொகுதிகளில் சிறுபான்மையின வேட்பாளர்கள் போட்டியிட்டபோதும், அச்சமூகத்தினைச் சேர்ந்த வாக்காளர்கள் அவருக்கு வாக்களிக்கவில்லை. (11) சில சந்தர்ப்பங்களில் பல்அங்கத்தவர் தொகுதிகளில் ஒன்றுக்கு மேற்பட்ட சிறுபான்மை வேட்பாளர்கள் போட்டியிட்டமையும் அச்சமூகத்தின் பிரதிநிதித்துவத்தை தடுத்துவிட்டது. உதாரணமாக 1952 மற்றும் 1956ம் ஆண்டுகளில் இடம்பெற்ற பொது தேர்தல்களில் பலாங்கொட மற்றும் பதுளை தேர்தல் தொகுதிகளில் இருந்து எந்த ஒரு தமிழ் பிரதிநிதியும் தெரிவு செய்யப்படவில்லை.

- நியமன உறுப்பினர்: எண்ணிக்கையில் சிறுபான்மையினராக காணப்பட்ட ஐரோப்பியர், முஸ்லிம்கள் மற்றும் பறங்கியர் ஆகியோருக்கு பிரதிநிதித்துவம் வழங்கும் நோக்கிலேயே நியமன உறுப்பினர் முறை அறிமுகம் செய்யப்பட்டது. இவ்வேற்பாடு 1947 மற்றும் 1952ம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன் றத் தேர்தல்களில் மாத்திரமே சிறுபான்மையினருக்கு வாய்ப்பாக அமைந்தது. பின்னர் இவ்வேற்பாடு சிங்கள சமூகத்தில் சாதியடிப்படையில் ஒடுக்கபட்ட / தாழ்த்தப்பட்ட நிலையில் அரசியல் பிரதிநிதித்து வம் இன்றி காணப்பட்ட சமூகங்களுக்கு பிரதிநிதித்துவம் கொடுப்பதற்காக மாறி மாறி பதவிக்கு வந்த

Department of Examinations - Sri Lanka

பிரதமர்கள் இதனைப் பயன்படுத்தினர். சில சந்தரப்பங்களில் சிறுபான்மை இனத்தவர்களை பிரதி நிதிதுவம் செய்யும் வகையில் நியமிக்கப்பட்டவர்கள் கூட தமது சமூகம் சார்ந்த நலன்களை கருத்தில் கொள்ளாமல் அரசாங்கத்திற்கு ஆதரவளித்தனர்.

- பொதுச்சேவை ஆணைக்குழுவின் நோக்கம் சிறுபான்மையினர் உரிமைகளை பாதுகாப்பதல்ல. ஆயி–னும் சிறுபான்மையினர் தமது உரிமைகளைப் பாதுகாப்பதற்கு இவ்வமைப்பு உதவியாக அமைந்தது. அரச சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்யும்போது நடுநிலையாக / பக்கசார்பின்றி, திறமை மற்றும் தகுதி–க்கு முன்னுரிமை கொடுத்து செயற்பட்டமையினால் சிறுபான்மையினரும் நன்மையடைந்தனர். அதே வேளை, மகா தேசாதிபதியும் கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்ட பொது மனிதர் என்ற வகையில் சிறுபான் மையினரின் உரிமைகளை பாதுகாப்பார் என எதிர்பார்க்கப்பட்டது. ஆயினும் அது நடைமுறையில் இடம்பெறவில்லை.

**முடிவுரை** **(01 புள்ளி)**

- சுதந்திரத்திற்குப் பின்னரான இலங்கையில் சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சில நல்ல ஏற்பாடுகளை சோல்பரி அரசியலமைப்பு கொண்டிருந்தது. ஆயினும் சுதந்திரத்திற்குப் பின்னரும் இனத்துவ அரசியல் போட்டி இலங்கையுனுடைய அரசியலை தொடர்ந்தும் ஆதிக்கம் செலுத் தியமையால் இவ்வேற்பாடுகள் வெற்றியளிக்கவில்லை.

- இதன் இறுதி விளைவு யாதெனில், இனத்துவப்போட்டி கூர்மையடைந்தமை மற்றும் நாட்டில் சமாதானத் துடன்கூடிய இனத்துவ உறவினை கட்டியெழுப்புவதில் அரசியலமைப்பு ஏற்பாடுகள் மற்றும் திட்டங்கள் தோல்வியடைந்தமையாகும்.

Department of Examinations - Sri Lanka

**வினா இலக்கம் 06 :**

**இலங்கையின் 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பிற்கு அறிமுகம் செய்யப்பட்ட பின்வரும் திருத்தங்கள் ஜனாதிபதியின் அதிகாரங்கள் தொடர்பாக ஜனாதிபதியின் அதிகாரம் தொடர்பாக ஏற்படுத்திய மாற்றங்களை எடுத்துக்காட்டுக.**

i. **18 ஆவது திருத்தம்** (10 புள்ளிகள்)

ii. **19 ஆவது திருத்தம்** (10 புள்ளிகள்)

i. **18 ஆவது திருத்தம்**

**அறிமுகம்** (01 புள்ளி)

அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கமிடையிலான போர் முடிவடைந்த பின்னர் துரித பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்தும் நோக்கில் ஜனாதிபதிக்கு எல்லையற்ற அதிகாரத்தினை வழங்கும் நோக்குடன் அறிமுகம் செய்யப்பட்ட திருத்தமே 18வது திருத்தமாகும்.

**உள்ளடக்கம்** (08 புள்ளிகள்)

**18வது திருத்தத்தின் மூலம் ஜனாதிபதியின் அதிகாரங்கள் தொடர்பாக செய்யப்பட்ட மாற்றங்கள்**

- ஜனாதிபதியின் இரு தவணைப்பதவிக்காலம் நீக்கப்பட்டு எத்தனை தடவை வேண்டுமானாலும் பதவி வகிக்க முடியும் என்ற ஏற்பாடு அறிமுகம் செய்யப்பட்டது.

- 17வது அரசியலமைப்பு திருத்தத்தின் மூலம் அறிமுகம் செய்யப்பட்ட சுயாதீன ஆணைக் குழுக்கான நியமனங்களை வழங்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டதுடன், அவை ஜனாதி பதியின் நேரடிக்கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டன.

- சுயாதீன ஆணைக்குழுக்களின் உறுப்பினர்களை நீக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டது.

- அரசியலமைப்பு பேரவை நீக்கப்பட்டு மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரங்களையுக் கொண்ட பாராளுமன்றப் பேரவையொன்று அறிமுகம் செய்யப்பட்டது. இப்பேரவை ஜனாதிபதிக்கு உயர் நியமனங்கள் தொடர்பாக ஆலோசனைகளை வழங்கும் அதிகாரத்தினைக் கொண்டிருந்தாலும், அவற்றினை ஜனாதிபதி பின்பற்றவேண்டிய அவசியம் இருக்கவில்லை. இதன் காரணமாக ஜனாதிபதி சுயாதீன ஆணைக் குழுக்களுக்கும், உயர்நிலை நீதிமன்றங்களுக்கும் தமது தற்துணிபு அதிகாரத்தின் அடிப்படையில் நியமனங்களை மேற்கொண்டார்.

Department of Examinations - Sri Lanka

- மேலும் 18வது திருத்தம் சட்டமா அதிபர், கணக்காளர் நாயகம், ஒம்புட்ஸ்மன், பாராளுமன்ற செயலாளர் நாயகம் மற்றும் நீதிச்சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர்களை நியமிப்பது தொடர்பாக ஜனாதிபதிக் கிருந்த அதிகாரங்களை மேலும் வலுப்படுத்தியது.

**முடிவுரை** **(01 புள்ளி)**

- 18வது திருத்தத்தின் ஒட்டுமொத்த தாக்கம் என்னவென்றால், நிறைவேற்று அதிகாரங்கொண்ட ஜனாதி பதியின் அதிகாரங்கள் விஸ்தரிக்கபட்டமை மற்றும் வலுப்படுத்தப்பட்டமையாகும். இது 1978ஆம் ஆண்டு அரசியலமைப்பின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களைவிட அதிகளவிலான அதிகாரங்களை 18வது திருத்தம் ஜனாதிபதிக்கு வழங்கியது.

- இத்திருத்தத்தின் கீழ் நிறைவேற்று ஜனாதிபதியின் அதிகாரங்கள் மேலும் அதிகரிக்கப்பட்டமையானது, அரசியல் நடுநிலைத்தன்மை மற்றும் அரசியல் செல்வாக்கிற்கு அப்பால் நின்று செயற்பட வேண்டிய நீதித்துறை, பொதுச்சேவை மற்றும் சுயாதீன ஆணைக்குழுக்கள் என்பவற்றின் சுயாதீனத்தன்மையின் மீது அது எதிர்கணிய தாக்கத்தினை ஏற்படுத்தியது.

**ii. 19 வது திருத்தம்**

**அறிமுகம்** **(01 புள்ளி)**

1978ம் ஆண்டு அரசியலமைப்புக்கு அறிமுகம் செய்யப்பட்ட திருத்தங்களில் பெரிதும் ஜனநாயகப் பண்புகளினை அறிமுகம் செய்த திருத்தமாக 19வது திருத்தத்தினை குறிப்பிட முடியும். இது நிறைவேற்று ஜனாதிபதி முறையில் திருத்தங்களை செய்ததுடன், பாராளுமன்ற அரசாங்க முறையின் சில பிரதான பண்புகளையும் அறிமுகம் செய்தது. இவை பின்னர் பெரியளவிலான விமர்சனத்திற்கு உள்ளாகியது.

**உள்ளடக்கம்** **(08 புள்ளிகள்)**

**19வது திருத்தத்தின் மூலம் ஜனாதிபதியின் அதிகாரங்கள் தொடர்பாக செய்யப்பட்ட மாற்றங்கள்**

- ஜனாதிபதியின் அதிகாரங்கள் தடைகள் மற்றும் சமன்பாடுகளுக்கு உட்பட்டன.

- ஏற்கனவே காணப்பட்ட வெஸ்ட்மின்ஸ்டர் முறைக்கு ஒப்பான ஒரு சில பண்புகளைக் கொண்ட பாராளுமன்ற– கபினட் அரசாங்க முறையின் பிராதன பண்புகள் அறிமுகம் செய்யப்பட்டன.

Department of Examinations - Sri Lanka

- இதன் காரணமாக ஜனாதிபதியிடம் காணப்பட்ட சில நிறைவேற்று அதிகாரங்கள் பிரதமருக்கு வழங்கப் பட்டது.

- அரசியலமைப்பு பேரவை மீள அறிமுகம் செய்யப்பட்டதுடன், சுயாதீன ஆணைக்குழுக்கழுக்கு நியம னங்களை வழங்குவதில் ஜனாதிபதிக்கு இருந்த தற்துணிவு அதிகாரங்கள் மட்டுப்பாடுகளுக்கு உள்ளாகின.

- அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்களை நியமிப்பது தொடர்பான ஜனாதிபதியின் அதிகா ரங்கள் மட்டுப்பாடுகளுக்கு உள்ளாகியது. அமைச்சரவையின் அமைச்சர்களின் எண்ணிக்கை 30 ஆக மட்டுப்படுத்தப்பட்டது. இராஜாங்க அமைச்சர்களின் எண்ணிக்கை 40 என வரையறுக்கப்பட்டது.

- அமைச்சர்களை மற்றும் இராஜாங்க அமைச்சர்களை நியமிப்பதில் ஜனாதிபதிக்கு காணப்பட்ட தற்துணிவு அதிகாரம் நீக்கப்பட்டது. அமைச்சர்களை நியமிக்கும் அதிகாரத்தினை தொடர்ந்தும் ஜனா-திபதி கொண்டிருந்தாலும் அந்நியமனங்கள் பிரதமரின் ஆலோசனையின் பெயரிலேயே மேற்கொள் ளப்பட வேண்டும் என்ற ஏற்பாடு அறிமுகம் செய்யப்பட்டது.

- ஜனாதிபதி அமைச்சரவையின் தன்மை, விருப்பங்கள், அவர்களுக்கான விடயதானங்களை ஒதுக் கீடு செய்தல் தொடர்பான அதிகாரத்தினை தொடர்ந்தும் கொண்டிருந்தாலும், அமைச்சர்களை நீக்கும் போது பிரதமரின் சிபாரிசின் பெயரில் மேற்கொள்ள வேண்டும் என்ற ஏற்பாடு அறிமுகம் செய்யப்பட்டது.

- அமைச்சரவையினை கலைப்பதற்கு ஜனாதிபதிக்கு இருந்த அதிகாரம் நீக்கப்பட்டது, அது பாராளுமன் றத்துக்கு வழங்கப்பட்டது.

- பாராளுமன்றத்தினை கலைக்கும் அதிகாரம் மட்டுப்படுத்தப்பட்டதுடன் பாராளுமன்றம் 4 1 / 2 வருட பதவிக்காலத்தை நிறைவு செய்த பின்னரேயே கலைக்க முடியும் என்ற ஏற்பாடு அறிமுகம் செய்யப்பட்டது.

- ஜனாதிபதிக்கு இருந்த விடுபாட்டுரிமையின் மீது கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டது. அதன்படி ஜனாதிப தியின் செயற்பாடுகளை அடிப்படை உரிமை வழக்குகள் மூலம் உச்ச நீதிமன்றத்திற்கு பாரப்படுத்த முடியும்.

- 19வது திருத்தத்தின் கீழ் ஜனாதிபதிக்கு புதிய பொறுப்புக்கள் வழங்கப்பட்டன. அவை 1978ஆம் ஆண்டு மூல அரசியலமைப்பில் காணப்படவில்லை. தேசிய ஐக்கியம் மற்றும் நல்லினக்கத்தினை உறுதி செய்வது, ஆணைக்குழுக்களின் சுயாதீனத்தன்மையினை உறுதி செய்தல், சுதந்திரமான மற்றும் நியா யமான தேர்தல் மற்றும் சர்வசன வாக்கெடுப்பு ஆகியவற்றினை நடாத்துவதற்கான சூழ்நிலையினை உறுதி செய்தல் என்பன அவற்றில் அடங்கும்.



Department of Examinations - Sri Lanka

**முடிவுரை** **(01 புள்ளி)**

- 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் கீழ் அறிமுகம் செய்யப்பட்ட நிறைவேற்று அதிகாரங்கொண்ட ஜனாதிபதி முறையின் ஒட்டுமொத்த கட்டமைப்பினையும் மறுசீரமைப்பதற்காக அறிமுகம் செய்யப்பட்ட அரசியலமைப்பு சீர்திருத்தத்தின் ஒரு பகுதியே 19வது திருத்தமாகும்.

- ஜனாதிபதியின் அதிகாரங்களை குறைப்பது இதன் ஒரு முக்கிய நோக்கமாகக் காணப்பட்டது. மேலும் 19வது திருத்தம் பாராளுமன்ற – கபினட் முறை. அரசாங்கத்தின் பிரதான பண்புகளை மீள அறிமுகம் செய்வதனையும் நோக்காகக் கொண்டிருந்தது.

- ஆயினும், நடைமுறையில் இத்திருத்தம் எதிர்பாராத பிரச்சினைகளை ஏற்படுத்தியதுடன், அது 2018 ஆம் ஆண்டு அரசியலமைப்பு சூழ்ச்சிக்கும் வழிசெய்தது.

Department of Examinations - Sri Lanka

**வினா இலக்கம் 07 :**

(i) **மோதல் என்ற எண்ணக்கருவினை வரையறை செய்க.** **(05 புள்ளிகள்)**

**கலந்துரையாடல்**

- மோதல் என்பது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மனிதர்கள், சமூகக் குழுக்கள் அல்லது அரசுகளுக்கிடையே காணப்படும் ஒரு விசேட உறவாகும்.

- இவ் வினாவிற்கு விடையளிப்பதற்கு பேராசிரியர் கிறிஸ்டோபர் மிச்செல்லினால் முன்வைக்கப்பட்ட வரைவிலக்கணத்தைப் பயன்படுத்த முடியும். "மோதல் என்பது ஒவ்வாத இலக்குகள் காணப்படுகின்ற அல்லது அவ்வாறான இலக்குகள் இருப்பதாக சிந்திக்கின்ற இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட தனிநபர்கள் மற்றும் குழுக்களுக்கிடையில் நிலவும் உறவாகும்.

(ii) **மோதல்கள் எவ்வாறு வகைப்படுத்தப்படுகின்றன என்பதனை உதாரணங்கள் வழங்கி விபரிக்குக.** **(10 புள்ளிகள்)**

- மோதல்களை மூன்று வகையாக வகைப்படுத்தலாம். அவையாவன
  1. எளிய வகைப்பாடு
  2. செயல்பாட்டுவாத வகைப்பாடு
  3. அரசியல் வகைப்பாடு

**எளிய வகைப்பாடு**

1. தனிநபருக்குள் இடம்பெறும் மோதல் :
   - தனிப்பட்ட அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு தனிப்பட்ட நபர்களின் சொந்த மனதில் இடம்பெறும் மோதலாகும்.

2. தனிநபர்களுக்கிடையில் இடம்பெறும் மோதல் :
   - இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தனிநபர்களுக்கிடையே அவர்களின் தொடர்புகளில் ஏற்படும் மோதல்கள் ஆகும்.

3. குழுக்களுக்குள்ளான மோதல் :
   - வெவ்வேறு இலக்குகள் மற்றும் நோக்கங்கள் தொடர்பாக சமூகக் குழுக்களுக்குள் அவர்களின் உறுப்பினர்களிடையே ஏற்படும் மோதல்கள் ஆகும்.

Department of Examinations - Sri Lanka

4. குழுக்களுக்கிடையிலான மோதல் :
   - ஒன்றுக்கொன்று பொருந்தாத இலக்குகள் தொடர்பாக குழுக்களுக்கிடையில் இடம்பெறும் மோதல் ஆகும்.

**செயற்பாட்டுவாத வகைப்பாடு**

இந்த வகைப்பாடு சமூகத்தில் இடம்பெறும் மோதலின் செயற்பாட்டு ரீதியிலான பெறுபேற்றினை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இரண்டு வகையான செயற்பாட்டு மோதல்கள் காணப்படுகின்றன.

1. ஆக்கபூர்வமான மோதல் (நேர்க்கணிய)
   - நேர்மறையான விளைவுகளைத் தரும் மோதல்கள் ஆக்கபூர்வமான மோதல்களாக வகைப்ப டுத்தப்படுகின்றன.

   - இத்தகைய மோதலின் முடிவில் மோதலில் ஈடுபட்ட தரப்புகள் தாங்கள் மோதலில் இருந்து பயன் அடைந்ததாக உணர்கின்றனர்.

2. அழிவுதரக்கூடிய மோதல் (எதிர்மறை)
   - எதிர்மறையான விளைவுகளைத் தரும் அழிவுதரக்கூடிய மோதல் ஒன்றின் முடிவில் மோதலில் ஈடுபட்ட தரப்புகள் தாங்கள் மோதலின் காரணமாக தோல்வியடைந்தள்ளதாக உணர்கிறார்கள்.

   - எனவே மோதலில் ஈடுபடும் தரப்புகள் ஒருதலைப்பட்சமாக தமக்கு நன்மை தரும் விதத்தில் மோதலைப் புதுப்பிக்க விரும்புகின்றன. இங்கு மோதல் முடிவுக்கு வராது.

**அரசியல் வகைப்பாடு**

பேராசிரியர் பீட்டர் வலன்ஸ்டைன் அரசியல் ரீதியான வகைப்பாட்டில் மூன்று வகையான மோதல்களை அபிவிருத்தி செய்துள்ளார்.

1. அரசுகளுக்கிடையிலான மோதல்
   - இவை எல்லை அல்லது வளப் பிரச்சினைகள் போன்ற பல காரணங்களுக்காக அரசுகளுக்கிடையே தோன்றும் மோதல்களாகும்.

   - சில நேரங்களில் அரசுகளுக்கிடையேயான மோதல் அரசுகளுக்கிடையேயான போராகவும் அபிவிருத்தியடையலாம்.

Department of Examinations - Sri Lanka

2. அரசுக்குள்ளான (உள்நாட்டு) மோதல்

- இவை அரசுக்குள் ஏற்படும் மோதல்கள் ஆகும். இத்தகைய மோதல்களுக்கான பிரதான காரணம் அரசியல் அதிகாரம் தொடர்பான போட்டியாகும்.

- சமகால உலகில் அரசுக்குள் ஏற்படும் மோதல்களுக்கு உதாரணமாக இன மோதல்கள், நீடித்த ஆயுத மோதல்கள் மற்றும் உள்நாட்டுப் போர்கள் ஆகியவை குறிப்பிடப்படுகின்றன.

- கட்டமைப்பு, சமூக-பொருளாதார, அரசியல், கலாசார மற்றும் கருத்தியல் காரணிகள் அரசுக்குள் ஏற்படும் மோதல்களுக்கு வழிவகுக்கும் காரணிகளாகக் குறிப்பிடப்படுகின்றன.

3. அரசு உருவாக்க (நிர்மாண) மோதல்

- பீட்டர் வலன்ஸ்டீனின் கூற்றுப்படி அரசு உருவாக்க மோதல்கள் என்பது ஒரு குறிப்பிட்ட பிரதேசத்திற்கு உரிமை கோரும் அரசிற்குள் வாழும் ஒரு சமூகத்திற்கும் அரசாங்கத்திற்கும் இடையிலான மோதல்கள் ஆகும்.

- அரசு உருவாக்க மோதல்கள் இன அடையாளம், பிராந்திய சுயாட்சி, அதிகாரப் பகிர்வு போன்ற பிரச்சனைகளில் கவனம் செலுத்துகின்றன.

- அரசு உருவாக்க மோதல்களைத் தீர்ப்பதற்கு தற்போதுள்ள அரசியற் கட்டமைப்புகளை அதிகாரப் பகிர்வினை உள்வாங்குவதன் மூலம் சீர்திருத்த வேண்டும்.

(iii) **மோதல் தீர்வின் ஒரு வழிமுறை என்ற வகையில் பேச்சுவார்த்தை என்ற எண்ணக்கருவினை சுருக்கமாக விளக்குக.**

**(05 புள்ளிகள்)**

- மோதல் தீர்வு செயன்முறையில் மோதலைத் தீர்ப்பதற்கு நான்கு வழிமுறைகள் பயன்படுத்தப் படுகின்றன. அதில் ஒன்று பேச்சுவார்த்தை ஆகும் .

- மோதல் அதிகரிப்பதைத் தடுப்பதற்கும் மோதலைத் தீர்ப்பதற்கும் மோதல் தரப்புக்களுக்கிடையே பேச்சுவார்த்தை அவசியம் ஆகும்.

- ரோஜர் பிக்ஷர் மற்றும் வில்லியம் யூரி ஆகியோர் பேச்சுவார்த்தை என்பதனை பின்வருமாறு வரைவிலக்கணப்படுத்துகின்றனர். “பேச்சுவார்த்தை என்பது நாம் மற்றவர்களிடமிருந்து விரும்புவதை பெறுவதற்கான அடிப்படை வழிமுறையாகும். உங்களுக்கும் மற்றவர்களுக்கும் இடையில் சில

Department of Examinations - Sri Lanka

பொது அபிலாசைகள் பகிரப்படும்போதும் மற்றவர்களால் அவை எதிர்க்கப்படும் போதும் இரு தரப்புக்குமிடையே ஒரு உடன்பாட்டை எட்டுவதற்காக மேற்கொள்ளப்படும் ஒரு தொடர்பாடல் பரிமாற்றமே இதுவாகும்.

- பேச்சுவார்த்தை என்பது மோதலில் ஈடுபடும் தரப்பினர் அதைத் தீர்ப்பதற்காகப் பயன்படுத்தும் 'பேச்சுகள்' அல்லது 'கலந்துரையாடல்கள்' ஆகும்.

- மூன்று வகையான பேச்சுவார்த்தை முறைகள் காணப்படுகின்றன. அவையாவன (அ) பிரச்சினை-களைத் தீர்க்கும் பேச்சுவார்த்தை ( ஆ ) ஆதிக்கப் பேச்சுவார்த்தை ( இ ) நெகிழ்வுப் போக்குடைய பேச்சு வார்த்தை

Department of Examinations - Sri Lanka

# பகுதி III

**வினா இலக்கம் 08 :**

**பிரான்சின் டீ கோல் அரசாங்க முறையின் பிரதான பண்புகளை விவரிக்குக? (20 புள்ளிகள்)**

**அறிமுகம் (03 புள்ளிகள்)**

- பிரான்சின் 5ம் குடியரசு அரசியலமைப்பு கோலிஸ்ட் முறை அல்லது டிகோல் முறையெனவும் அறியப்படுகின்றது. அது ஜெனரல் சார்ல்ஸ் டிகோல் என்பவரால் அவரின் அரசியல் அபிலாசைகளை அடைந்துகொள்ளும் வகையில் உருவாக்கப்பட்ட அரசியலமைப்பாகும்.
- இவ்வரசியலமைப்பு ஒரு அரைகுறை அல்லது கலப்பு ஜனாதிபதி முறையினை உருவாக்கியதுடன், முன்னர் காணப்பட்ட பாராளுமன்ற மாதிரியிலான அரசாங்க முறையினை நீக்கியது.
- ஐந்தாம் குடியரசு அரசியலைப்பு உச்சளவில் மட்டுப்படுத்தப்பட்ட மற்றும் ஒற்றையாட்சி முறையினை அறிமுகம் செய்தது.
- இவ்வரசியலமைப்பு 3ம் மற்றும் 4ம் குடியரசு அரசியலமைப்புகளில் காணப்பட்ட குறைபாடுகளான அரசியல் ஸ்திரதன்மையின்மை, பலவீனமான நிறைவேற்றுத்துறை, அரசியல் கட்சிகளின் உறுதியற்ற தன்மை ஆகியவற்றினை நிவர்த்தி செய்யும் வகையில் அறிமுகம் செய்யபட்டது.
- புதிய அரசியலமைப்பு பலமான ஜனாதிபதி ஒருவரை உருவாக்கியது.
- இம்முறை வெஸ்ட்மின்ஸ்டர் மாதிரியிலான அரசாங்க முறையில் இருந்து வேறுபடுகின்றது.

**உள்ளடக்கம் (15 புள்ளிகள்)**

- ஜனாதிபதி அரசின் தலைவராகவும் தேசிய ஐக்கியத்தின் சின்னமாகவும் செயல்படுவார்.
- நாட்டில் ஏற்படும் உள்ளக அரசியல் பிரிவினைகள் மற்றும் கட்சி அரசியலுக்கு அப்பால் நின்று செயற்படவேண்டிய நிலைப்பாட்டினைக் கொண்டிருந்தார்.
  உதாரணம் (அல்ஜீரிய நெருக்கடி)

Department of Examinations - Sri Lanka

- ஜனாதிபதி பாராளுமன்றத்தினை விட மேலானவர், பாராளுமன்றம், பிரதமர் மற்றும் அமைச்சரவை ஆகியன, அதிகாரம் மற்றும் அதிகாரத்துவம் என்பவற்றில் ஜனாதிபதிக்கு கீழ்பட்ட நிலையிலேயே காணப்படுகின்றது.

- ஜனாதிபதி நிறைவேற்றுத்துறைக்கு தலைமை தாங்குவதுடன் அது பாராளுமன்றத்தினை விட அதிகாரமிக்கது.

- பிரதமர் மற்றும் அமைச்சர்கள் ஜனாதிபதியால் நியமிக்கப்படுகின்றார்கள்.

- அமைச்சர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களாக இருக்க முடியாது. பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் அமைச்சரவைக்கு நியமிக்கப்பட்டால், அவர் தனது பாராளுமன்ற உறுப்புரிமையினை இராஜினாமா செய்யவேண்டும்.

- சட்டத்துறைக்கும், நிறைவேற்றுத்துறைக்குமிடையில் அதிகாரவேறாக்கம் காணப்படுகின்றது.

- மக்களால் நேரடியாக ஜனாதிபதி தெரிவு செய்யப்படும் முறை ஏற்படுத்தக்கூடிய ஸ்திரத்தன்மையின் மையினை தவிர்ப்பதற்காக, ஆரம்பத்தில் ஜனாதிபதியினை ஒரு தேர்தல் கல்லூரியின் மூலம் தெரிவு செய்வதற்கான யோசனை முன்வைக்கபட்டது.

- ஆயினும் 1962ம் ஆண்டு இடம்பெற்ற மக்கள் தீர்ப்பு ஜனாதிபதி நேரடியாக மக்களால் தெரிவு செய்யப்பட வேண்டும் என்ற விடயத்தினை அனுமதித்தது.

- ஜனாதிபதி பல அவசரகால அதிகாரங்களைக் கொண்டுள்ளார். குறிப்பாக, குடியரசுக்கு அச்சுறுத்தலொன்று காணப்படும்போது, தேசிய சுதந்திரம் மற்றும் ஆள்புல ஒருமைப்பாடு என்பவற்றுக்கு அச்சுறுத்தல் நிலவும்போது இவ்வதிகாரத்தினை பிரயோகிக்கமுடியும்.

- ஜனாதிபதி ஐந்து வருட பதவிக்காலத்துக்கு தெரிவு செய்யப்படுகின்றார்.

- ஜனாதிபதி பிரதமரை நியமிக்கின்ற அதேவேளை, பிரதமரின் சிபாரிசின் பெயரில் அமைச்சர்களை நியமிக்கின்றார்.

- ஜனாதிபதி பாராளுமன்ற உறுப்பினர் அல்லாத ஒருவரைக்கூட பிரதமராக நியமிக்க முடியும்.

- பிரதமரை ஜனாதிபதி நியமித்த பின்னர், அவர் சட்டத்துறையில் நம்பிக்கையினை அல்லது பெரும்பான்மை ஆதரவினை வெளிப்படுத்தும் வகையில் வாக்கெடுப்பினை நடாத்தி அதனை பாராளுமன்றத்தில் நிறைவேற்றவேண்டிய அவசியம் இல்லை. அதேவேளை சட்டத்துறைக்கு பிரதமரையோ அல்லது அமைச்சர் ஒருவரையோ நம்பிக்கையில்லா பிரேரணை ஒன்றின் மூலம் பதவி நீக்க முடியாது.



Department of Examinations - Sri Lanka

**முடிவுரை** **(02 புள்ளிகள்)**

- ஐந்தாம் குடியரசு அரசியலமைப்பு இரட்டை நிறைவேற்றுமுறை மற்றும் கலப்பு ஜனாதிபதி முறையினை அறிமுகம் செய்தது.

- இலங்கையின் 1978ம் ஆண்டு அரசியலமைப்பினை வரைவதற்காக எடுத்துக்கொள்ளப்பட்ட அரசியலமைப்பு மாதிரிகளில் டீகோல் முறையும் ஒன்றாகும்.

- பிரான்சிய ஜனாதிபதிமுறை நீண்டகாலம் பெரியளவிலான மாற்றங்களுக்கு உள்ளாகவில்லை.

- டிகோல் முறை ஒரு பரந்துபட்ட / மேம்பட்ட நிர்வாக அதிகாரப்பன் முகப்படுத்தலை அறிமுகம் செய்தது.

Department of Examinations - Sri Lanka

**வினா இலக்கம் 09 :**

**i. பொதுக் கொள்கை என்பதினை வரையறை செய்க? (05 புள்ளிகள்)**

பொதுக்கொள்கையினை வரையறை செய்வதற்கு பல வழிகள் காணப்படுகின்றன. அவ்வரை விலக்கணங்களை நோக்குவதன் ஊடாக பொதுக்கொள்கை தொடர்பான போதியளவிலான புரிதலைப் பெற்றுக்கொள்ள முடியும்.

- பொதுக்கொள்கை என்பது ஒரு அரசியல் செயன்முறை. அது சகல பிரஜைகளினதும் பிரச்சினைகளுடன் தொடர்புபட்டது.
- பொதுக்கொள்கை என்பது ஒரு செயன்முறை அது ஒரு தனி ஆவணமோ அல்லது ஒரு நிகழ்வோ அல்ல.
- பொதுக்கொள்கை செயன்முறையில் பல கட்டங்கள் காணப்படுகின்றன. அவையாவன நிகழ்ச்சி நிரல் தயாரித்தல்,கொள்கை உருவாக்கம், கொள்கை அமுலாக்கம் மற்றும் கொள்கை மதிப்பீடு.
- அரசியல் மற்றும் நிர்வாக நிறுவனங்களே பொதுக்கொள்கைகளை உருவாக்கி, நடைமுறைப்படுத்தி அதனை மதிப்பீடு செய்கின்ற செயற்பாடுகளை மேற்கொள்கின்றன.
- பொதுக்கொள்கையூடாக தீர்க்க முற்படுகின்ற பொதுப்பிரச்சினைகள் உண்மையான பிரச்சினைகளாகவும், சில நேரம் கற்பனை ரீதியானதாகவும் இருக்கலாம்.
- பொதுக்கொள்கையின் வடிவம், உள்ளடக்கம் மற்றும் அமுலாக்கம் ஆகியன கொள்கையாக்க விடயங்களுக்கு பொறுப்பாக இருக்கின்ற நிறுவனங்களுக்கு கிடைக்கின்ற தகவல்களை அடிப்படையாக கொண்டு மாற்றமடையும்.
- அமெரிக்க அரசியல் விஞ்ஞானியான தோமஸ் ஆர் டை (Thomas R Dye) என்பவர் பொதுக்கொள்கையினை ”அரசாங்கம் என்ன செய்கின்றது! ஏன் அதனை செய்கின்றார்கள்! மற்றும் அது எத்தகைய மாற்றங்களை ஏற்படுத்துகின்றது” என வரையறை செய்கின்றார்.
- பிறிதொரு அமெரிக்க அரசியல் விஞ்ஞானியான ஹரோல்ட் லாஸ்வெல் (Harold Dwist Lasswell) “அரசாங்கத்தின் நடவடிக்கைத் திட்டத்தின் ஊடாக எதிர்பார்க்கப்படுகின்ற அல்லது திட்டமிடப்பட்ட செயற்திட்டங்களின் இலக்குகள்,அபிலாசைகள்,பெறுமானங்கள் மற்றும் நடைமுறைகள்” என வரையறை செய்கின்றார்.

Department of Examinations - Sri Lanka

- ஜேம்ஸ் என்ரசன் (James Andreson) என்பவர் "பொதுமக்களின் கவனத்திற்குட்பட்ட பிரச்சினையொன்றினைத் தீர்க்கும் நோக்கில் அதிகாரமிக்க செயற்பாட்டாளர் ஒருவர் அல்லது பலர் பொதுக்கொள்கை தொடர்பான அறிவினைப் பயன்படுத்தி முன்னெடுக்கும் நோக்கத்தினை அடிப்படையாகக் கொண்ட மற்றும் ஒப்பீட்டளவில் நிலையான செயற்பாடுகள்" பொதுக்கொள்கை என வரையறை செய்தார்.

**ii. பொதுக்கொள்கை செயன்முறையில் அரசியல் நிறைவேற்றுத்துறை மற்றும் நிரந்தர நிறைவேற்றுத் துறையின் வகிபங்கினை விளக்குக? (15 புள்ளிகள்)**

**அறிமுகம் (02 புள்ளிகள்)**

- நவீன ஜனநாயகங்களில் அரசியல் மற்றும் நிரந்தர நிறைவேற்றுத்துறைகள் முக்கியமான வகிபங்கினைக் கொண்டுள்ளன.

- பொதுக்கொள்கை தொடர்பான மரபுரீதியான புரிதல் யாதெனில், கொள்கைகளை உருவாக்கும் பணி அரசியல்வாதிகளுக்குரித்தானது, அதனை அமுல்படுத்துவது பொதுத்துறை நிர்வாகம் என்பதாகும்.

- அரசியல் மற்றும் நிரந்தர நிறைவேற்றுத்துறைக்கு அப்பால் மேலும் இரண்டு நிறுவனங்கள், தேவையேற்படுகின்ற போது பொதுப்பிரச்சினைகளை தீர்ப்பதில் தலையீடு செய்கின்றன.

- மேலும் மாகாண மற்றும் உள்ளூராட்சி அதிகார சபைகளும் பிராந்திய மற்றும் உள்ளூர் மட்டத்தில் நிலவும் பல்வேறுபட்ட பொதுப்பிரச்சினைகளை தீர்ப்பதில் பங்களிப்பு வழங்குகின்றது.

**உள்ளடக்கம் (11 புள்ளிகள்)**

**அரசியல் நிறைவேற்றுத்துறையின் வகிபங்கு**

- அரசியல் கோட்பாட்டிற்கிணங்க, அரசியல் நிறைவேற்றுத்துறை என்பது அமைச்சரவையினை குறித்து நிற்பதுடன், அதுவே பொதுக்கொள்கைகளை உருவாக்கும் மேலானதும் இறுதியானதுமான அதிகாரத்தினைக் கொண்டுள்ளது.

- அரசியல் நிறைவேற்றுத்துறை கொள்கையாக்கச் செயன்முறையின்போது பாராளுமன்றத்தின் ஊடாக பொது மக்களுக்கு பொறுப்பு கூறுகின்றது. இது பாராளுமன்ற ஜனநாயக நடைமுறையாகக் காணப்படுகின்றது.

- ஜனாதிபதித்துவ அரசாங்கமுறையில் கூட பொதுக்கொள்கைகளை உருவாக்கி அவற்றினை நடைமுறைப்படுத்தும் செயற்பாட்டிற்கு அரசியல் நிறைவேற்றுத்துறை தலைமைத்துவத்தினை வழங்க வேண்டும்.

Department of Examinations - Sri Lanka

- அரசியல் நிறைவேற்றுத்துறை கொள்கை அமுலாக்கத்திற்கு சிவில் சேவையில் (பொது நிர்வாகம்) தங்கியுள்ளது.

- பாராளுமன்ற ஜனநாயகங்களில் அரசியல் நிறைவேற்றுத்துறை குறிப்பாக அமைச்சரவையே சட்டத்துறையின் நிகழ்ச்சி நிரலை தீர்மானிக்கின்றது.

- ஆகவே, இன்று சட்டத்துறையின் பொதுக்கொள்கை உருவாக்கச் செயன்முறையின் மீது அரசியல் நிறைவேற்றுத்துறையின் ஆதிக்கம் மேலோங்கி காணப்படுகின்றது.

**நிரந்தர நிர்வாகத்தின் வகிபங்கு**

- நவீன உலகில் நிரந்தர நிறைவேற்றுத்துறையானது பொதுக்கொள்கைகளை அமுல்படுத்துகின்ற அரசின் ஒரு நிறுவனமாக காணப்படுகின்றது. அது "பணியகவர்க்கம்" "சிவில் சேவை" என்று அழைக்கப்படுவதுடன் நிரந்தரப் பணியாளர்களைக் கொண்ட அமைப்பாகும்.

- நிரந்தர நிறைவேற்றுத்துறை அரசியல் கலப்பற்ற மற்றும் சிறப்புத்தேர்ச்சி பெற்றவர்களைக் கொண்ட அமைப்பு என நோக்கப்படுகின்றது.

- அரசாங்கம் மாறும்போது நிரந்தர நிறைவேற்றுத்துறை மாற்றமடையாது ஆகையால், கொள்கை அமுலாக்கம் என்பது ஒரு தொழில்நுட்ப பயிற்சியாக நோக்கப்படுகின்றது.

- நிரந்தர நிறைவேற்றுத்துறையின் பிரதான பணி யாதெனில் அரசாங்கத்தின் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதாகும். மேலும் இது அரசியல் நிறைவேற்றுத்துறையின் தலைமைத்துவத்தின் கீழ் சுதந்திரமாக செயற்படும்.

- பொதுநிர்வாகம் தொடர்பான மரபு ரீதியான கோட்பாட்டிற்கிணங்க நிரந்தர நிறைவேற்றுத்துறைக்கு பொதுக்கொள்கையினை உருவாக்கும் வகிபங்கு காணப்படவில்லை.

- ஆயினும் இன்று பொதுக்கொள்கை உருவாக்கத்தில் நிரந்தர நிறைவேற்றுத்துறையினர் அரசியல் நிறைவேற்றுத்துறையினை விஞ்சிய வகிபங்கினைக்கொண்டுள்ளனர். இதற்கு காரணம் பொதுக் கொள்கைகளின் சிக்கலானதன்மை, நிரந்தர நிறைவேற்றுத்துறையினர் கொண்டுள்ள அறிவு / தகைமை / நிபுணத்துவம் மற்றும் தகவல்களை அனுகுவதற்குள்ள வாய்ப்பு என்பனவாகும்.

- சிலர் தற்காலத்தில் பொதுக்கொள்கையினை நடைமுறையில் உருவாக்குவோர் நிர்வாக அதிகாரிகளே என வாதிடுகின்றனர். இதனை "அரசியலை பணியகமயப்படுத்தல்" என அழைக்கின்றனர்.

Department of Examinations - Sri Lanka

**முடிவுரை** **(02 புள்ளிகள்)**

- அரசியல் மற்றும் நிரந்தர நிறைவேற்றுத்துறைகள் கொள்கைச் செயன்முறையில் சிறந்த இணைப்பு மற்றும் ஒத்துழைப்பினைப் பேணவேண்டும். குறிப்பாக நிரந்தர நிறைவேற்றுத்துறை அரசியல் நடுநிலைத் தன்மையினை பேணவேண்டும்.

- அரசியல்வாதிகள் மற்றும் பொதுமக்கள் பொது நிர்வாகத்தின் மீது அழுத்தம் பிரயோகிக்க கூடாது என்ற கருத்து நிலவுகின்றது.

- அதேவேளை பொதுக்கொள்கைகள் சகல பொதுப்பிரச்சினைகளைத் தீர்ப்பதில் எல்லா சந்தர்ப்பங்களிலும் வெற்றியடையவில்லை என்ற விமர்சனமும் நிலவுகின்றது.
  உதாரணம்: வேலையில்லாப் பிரச்சினை, சுற்றாடல் பிரச்சினைகள்

- நவீன ஜனநாயகங்களில் நிரந்தர நிறைவேற்றுத்துறை கொள்கைச் செயன்முறையில் பெரியளவிலான ஆதிக்கத்தைச் செலுத்துகின்றது.

- இதற்கு சிக்கலான சமூகப்பிரச்சினைகளை கையாள்வதில் அவர்களுக்குள்ள அனுபவம்,நிபுணத்துவம் மற்றும் அறிவு என்பன காரணமாகும்.

- இந்நிலைக்கு சிவில் சேவையில் உயர்குழாம் வர்க்கத்தின் செல்வாக்கு மேலோங்கியிருப்பதும் பங்களிப்பு செய்கின்றது எனலாம்.

Department of Examinations - Sri Lanka

**வினா இலக்கம் 10**

**பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்குச் சிறுகுறிப்புகள் எழுதுக.**

**i. இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள்**

**(10 புள்ளிகள்)**

- புவிசார் அரசியல் மற்றும் மூலோபாய காரணிகள்
  1. இந்து சமுத்திரத்தின் மத்தியில் அமைந்துள்ள அமைவிடம்.
     - இலங்கை பழங்கால மற்றும் நவீன கடற்படை வழித்தடங்களுக்கு அருகில் அமைந்துள்ளது.
     - இத் தீவு ஒரு தவிர்க்கமுடியாத கடல்சார் மூலோபாய மற்றும் நிகழ்ச்சித்திட்டப் புள்ளியில் அமைந்துள்ளது. (பொருளாதாரம், வர்த்தகம், அரசியல், மற்றும் பாதுகாப்பு மூலோபாயங்கள்)

  2. தெற்காசிய மற்றும் இந்து சமுத்திர விளிம்பு பிராந்திய அமைவிடத்தினைக் கொண்டுள்ளமை
     - மேற்கூறிய காரணத்தின் அடிப்படையில் இலங்கை சார்க் அமைப்பின் அங்கத்துவ நாடாக இணைந்துள்ளது. அத்துடன் சர்வதேச அமைப்புக்களான IORA, BIMSTEC போன்றவற்றில் செயலூக்கமுடைய உறுப்பினராக காணப்படுகின்றது. அத்துடன் இது இந்து சமுத்திரத்தில் விளிம்பு நிலையில் காணப்படும் இப்பிராந்தியத்தின் பிரச்சினைகளை எடுத்துரைத்தது.

- பிராந்திய மற்றும் உலகளாவிய வலுச்சமநிலை – உலகளாவிய வலுச்சமநிலையிலும் மற்றும் அரசியல், பொருளாதாரம், வர்த்தகம், மற்றும் பாதுகாப்பு துறைகளிலும் ஏற்படும் மாற்றங்கள்.

- அரசியல் பொருளாதாரம் – பொருளாதார மற்றும் அபிவிருத்தி கருத்தியல்கள், மூலோபாயங்கள் மற்றும் வேறுபட்ட ஆட்சிமுறைத் திட்டங்கள் என்பன வெளிநாட்டுக்கொள்கையின் மாற்றத்திற்கு காரணமாக அமைகின்றது.

- அரசியல் உயர் குழாமினர் மற்றும் ஆட்சியின் நலன்கள் – அரசியல் உயர் குழாமினர் மற்றும் ஆட்சியின் நலன்கள் இருதுருவ மற்றும் பல்துருவ வெளிநாட்டுக் கொள்கை மாற்றத்திற்கு காரணமாக அமைகின்றது.

- தேசிய நலன் மற்றும் தேசிய அதிகாரம் – தேசிய நலன், அரசியல் ஸ்திரத்தன்மை பொருளாதார கொள்திறன் மற்றும் இராணுவ அதிகாரம்.

- சமூகத்தின் எதிர்பார்ப்புகள் மற்றும் பொதுசன அபிப்பிராயங்களும் ஆதிபத்திய கருத்தியலும்.

- சிறிய அரசுகளாக இருத்தல் – சிறிய அரசுகள் ( நிலப்பரப்பு, அரசியல் – பொருளாதார ரீதியாக ) வெளிநாட்டுக்கொள்கையை அமுல்ப்படுத்துவதில் மட்டுப்படுத்தப்பட்ட தெரிவுகளைக் கொண்டுள்ளன. பெரும்பாலான சிறிய அரசுகள் நிலையான மற்றும் உறுதியான பேச்சுவார்த்தைகளுக்குப் பதிலாக பெரிய அதிகார சக்திகளின் ஆதரவினைக் கொண்டுள்ளன.

Department of Examinations - Sri Lanka

## ii. ஜனநாயக அரசாங்கத்தின் பிரதான பண்புகள் (10 புள்ளிகள்)

யாப்புறுவாதம் (அரசியலமைப்புவாதம்)

1. குறுகிய நோக்கில் பார்க்கும்போது யாப்புறுவாதம் என்பது அரசியல் அமைப்பொன்றின் ஊடாக சனநாயக அரசாங்கத்தினை நடைமுறைப்படுத்துவதற்கான திட்டங்களை வகுக்கும் கொள்கையாகும்.

2. மிகவும் பரந்த அர்த்தத்தில் பார்க்கும்போது யாப்புறுவாதம் என்பது அரசியல் விழுமியங்களின் தொகுதியாகவும் மற்றும் சமநிலைத் தலையீடுகளின் ஊடாக தனிமனித சுதந்திரத்தை பாதுகாப்பதற்காக அரசின் அதிகாரம் குவிவதை தடுக்கின்ற எதிர்பார்ப்பாகவும் காணப்படுகின்றது.

   இங்கு அரசாங்க அதிகாரத்தினைக் கட்டுப்படுத்தும் மூலோபாயமாக எழுதப்பட்ட அரசியலமைப்பொன்று இருத்தல், உரிமைகள் சட்டமொன்று காணப்படல், அதிகார வேறாக்கம், அதிகாரப் பகிர்வினை மேற்கொள்ளல் என்பன காணப்படுகின்றன.

- மக்கள் இறைமை – அரச அதிகாரத்தின் மூலாதாரமாக மக்கள் காணப்படுகின்றனர். அத்துடன் பொதுவிருப்பு என்பது ஆட்சியியலின் ஒரு மரபாக இருக்க வேண்டும்.

- அதிகார வேறாக்கம்

- தடைகளும் சமன்பாடுகளும்
  1. தடைகளும் சமன்பாடுகளும் என்பது அரசாங்கத்தின் யாதாயினும் ஒரு துறை மற்றைய துறையினை கட்டுபடுத்த முற்படும்போது மற்றைய துறை தலையிட்டுத் தடைகளை ஏற்படுத்த வேண்டும் என்பதாகும்.

  2. அரசாங்கத்தின் முத்துறைகளான சட்டத்துறை, நிறைவேற்றுத்துறை, நீதித்துறைகளின் அதிகாரங்கள் சமநிலையாகக் காணப்பட வேண்டும்.

- சட்டத்தின் ஆட்சி
  1. சட்டத்தின் முன் யாவரும் சமன்

  2. அரசாங்கத்தின் நிறைவேற்று மற்றும் சட்டத்துறையின் அதிகாரமானது தனிமனித சுதந்திரத்தை பாதுகாக்க உருவாக்கப்பட்ட அரசியலமைப்பின் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டிருக்க வேண்டும்.

- மனித உரிமைகள் – சர்வதேச மனித உரிமைகளின் பாதுகாப்பு மற்றும் அடிப்படை உரிமைகள் தொடர்பாக அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

Department of Examinations - Sri Lanka

- வரையறுக்கப்பட்ட அரசாங்கம் - தடைகளும் சமன்பாடுகளும் மற்றும் அரசாங்க அதிகாரங்கள் தொடர்பான அரசியலமைப்பின் வரையறைகள்.

- மக்களுக்கு பொறுப்புக்கூறல்

- சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்

## iii. சர்வதேச அரசியலில் அரசு சார்ந்த செயற்பாட்டாளர்கள் (10 புள்ளிகள்)

சர்வதேச அரசியலில் காணப்படும் செயற்பாட்டாளர்களை இரு பிரிவாக வகைப்படுத்தி நோக்கலாம்.

1. அரசு சார்ந்த செயற்பாட்டாளர்கள்
2. அரசு சாராத செயற்பாட்டாளர்கள்

தேசிய அரசுகளால் நேரடியாக பிரதிநிதித்துவப்படுத்தப்படும் தேசிய அரசுகள், அவற்றின் அரசாங்கங்கள் மற்றும் சர்வதேச ஒழுங்கமைப்புக்கள் என்பன சர்வதேச அரசியலில் அரசு சார்ந்த செயற்பாட்டாளர்களாக வரையறுக்கப்படுகின்றனர்.

1. தேசிய அரசுகள்
   - சர்வதேச அரசியலின் பிரதான செயற்பாட்டாளராக தேசிய அரசுகள் இனங்காணப்பட்டுள்ளன. தற்காலத்தில் சர்வதேச அரசியலில் அரசசாராத செயற்பாட்டாளர்களின் தாக்கம் அதிகமாக இருந்த போதிலும் தேசிய அரசுகள் அதனது முக்கியத்துவத்தை இன்னும் இழக்கவில்லை.

   - வெஸ்பாலியா உடன்படிக்கை தேசிய அரசுகளுடனான நவீன உலக முறைமையின் ஆரம்பமாகக் கொள்ளப்படுகிறது. வெஸ்பாலியா உடன்படிக்கையின் மூலதத்துவங்கள் அரசுக்குள்ளான மற்றும் அரசுகளுக்கிடையிலான உறவுகள் தொடர்பான இரண்டு மிகமுக்கியமான நிபந்தனைகளை அறிமுகஞ் செய்துள்ளது.
     1. அரசுகள் இறையாண்மையுடையவை. அவை உள்விவகாரங்களில் சுதந்திரமான நகர்வுகளைக் கொண்டுள்ளன. அரசினுள் காணப்படும் தனிநபர், நிறுவனங்கள் மற்றும் ஏனைய அனைத்து சக்திகளும் அரச அதிகாரத்தின் கீழ் உள்ளவையாகும்.
     2. அரசுகளுக்கிடையிலான உறவுகள் அரசின் இறையாண்மை சுதந்திரத்தை ஏற்றுக்கொள்வதன் மூலம் வடிவமைக்கப்படவேண்டும்.

   - 1933 Montevideo மாநாடு வரையறுக்கப்பட்ட நிலப்பரப்பு, சனத்தொகை, அரசாங்கம், ஏனைய அரசுகளுடன் உறவுகளைப் பேணுவதற்கான திறன் என்பவற்றை அரசின் முக்கிய பண்புகளாக விபரிக்கின்றது.

Department of Examinations - Sri Lanka

2. சர்வதேச அரசு சார்ந்த ஒழுங்கமைப்புகள்

- தேசிய அரசுகளாலும் அவற்றின் அரசாங்கங்களினாலும் நேரடியாக பிரதிநிதித்துவப் படுத்தப்படுகின்ற சர்வதேச ஒழுங்கமைப்புக்களை சர்வதேச அரசு சார்ந்த ஒழுங்கமைப்புக்கள் என வரையறுக்கப்படுகின்றன.

- கூட்டுத் தேவைகளை பூர்த்தி செய்வதற்கும் மற்றும் அரசுகளுக்கிடையிலான பலதரப்பு உறவுகளை உருவாக்குவதற்கும் இவை ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

- ஐக்கிய நாடுகள் தாபனமானது மிகமுக்கியமான சர்வதேச அரசு சார்ந்த ஒழுங்கமைப்பாகும்.

- சர்வதேச அரசு சார்ந்த ஒழுங்கமைப்புக்கள் அவற்றின் நோக்கங்களின் அடிப்படையில் சில வகைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.
  1. சர்வதேச ஒழுங்கமைப்புக்கள் (ஐக்கிய நாடுகள் சபை, உலக வர்த்தக நிறுவனம்)
  2. பிராந்திய ஒழுங்கமைப்புக்கள் (சார்க் அமைப்பு, ஐரோப்பிய ஒன்றியம்)

## iv. இந்திய அரசாங்க முறையின் பிரதான பண்புகள் (10 புள்ளிகள்)

1950 இல் ஏற்றுக்கொள்ளப்பட்ட இந்திய அரசியலமைப்பானது இந்திய அரசாங்க முறையின் பிரதான பண்புகளை விபரிக்கின்றது.

- அரசியலமைப்பின் பிரிவு 1 ஆனது இந்தியா “மாநிலங்களின் ஒன்றியம்” எனக் குறிப்பிடுகின்றது. அது 28 மாநிலங்களையும் 9 யூனியன் பிரதேசங்களையும் உள்ளடக்கியுள்ளது.

- இந்திய மாநிலங்களின் ஒன்றியமானது, மாநில அரசுகளின் ஒப்புதலின் பேரில் நிறுவப்பட்ட ஒன்றல்ல என்பதுடன், இவ் ஒன்றியத்தில் இருந்து மாநில அரசுகள் பிரிந்து செல்ல முடியாது.

- இந்திய அரசாங்கத்தின் அரசியலமைப்பு மாதிரியானது ஒற்றையாட்சி மற்றும் சமஷ்டியாட்சி அம்சங்களைக் கொண்டிருப்பதால், இது ஒரு பாதி-சமஷ்டி அல்லது அரைகுறை-சமஷ்டி (semi-federal or quasi-federal system) அரசாங்க முறை என விவரிக்கப்படுகிறது.

- ஆனால், இந்திய அரசியலமைப்புச் சட்டமானது இந்தியாவை ஒரு சமஷ்டியாட்சி எனக் குறிப்பிடவில்லை.

Department of Examinations - Sri Lanka

- இவ் ஒன்றியத்தில் உள்ள அனைத்து சமஷ்டி அலகுகளும் ஒரே அளவிலான அதிகாரங்கள் மற்றும் திறன்களைக் கொண்டிருக்கவில்லை, ஆகையால் இங்கு மாநிலங்களுக்கு இடையிலான "அதிகாரங்களில் சமச்சீரற்ற தன்மை" ஒன்று நிலவுகின்றது.

- இந்தியாவின் அரசியலமைப்பானது ஒரு வலுவான மத்திய அரசு இருப்பதை வலியுறுத்தி நிற்கின்றது.

- இருப்பினும், அண்மைக்கால போக்குகள் மற்றும் முன்னேற்றங்களை கவனத்தில் எடுத்துப் பார்க்கும் போது இந்திய அரசாங்க முறையானது சமஷ்டி ஆட்சி அம்சங்களை அதிகளவில் கொண்டுள்ளது என குறிப்பிடப்படுகின்றது.

- இந்திய அரசாங்க மாதிரியானது அரசியலமைப்பின் கடினத்தன்மையினை வெளிப்படுத்தவில்லை, இது சமஷ்டி ஆட்சியின் பொதுவான பண்பு ஆகும். இதற்கு மாறாக, இங்கு ஒரு நெகிழக்கூடிய அரசாங்கமும் நெகிழக்கூடிய அரசியலமைப்புமே உருவாக்கப்பட்டுள்ளது.

- இந்திய அரசாங்க மாதிரியானது வெஸ்ட்மின்ஸ்டர் முறை மற்றும் குடியரசு முறையின் ஓர் கலவையாகும்.

- இந்திய அரசாங்க முறையின் மற்ற அம்சங்களை மாணவர் விரிவாக எடுத்துரைத்திருந்தால் மதிப்பெண்கள் வழங்கப்பட வேண்டும். இது போன்ற சந்தர்ப்பங்களில் தலைமை மேற்பார்வையாளரிடம் கலந்து ஆலோசித்து ஆசிரியர் வழிகாட்டி நூலைப் பார்க்கவும்.

## V. அரசியற் கட்சிகளின் பணிகள் (10 புள்ளிகள்)

- அரசியல் கட்சி என்பது தேர்தல் அல்லது வேறு வழிகளில் அரசாங்க அதிகாரத்தை வெற்றி கொள்வதற்காக ஒழுங்கமைக்கப்பட்ட ஒரு மக்கள் குழுவாகும். இதில் ஜனநாயக முறை மற்றும் சர்வாதிகார முறைகளில் செயல்படும் அரசியல் கட்சிகளின் செயல்பாடுகளுக்கிடையில் வேறுபாடு காணப்படலாம். பொதுவாக, அரசியல் கட்சிகளின் பணிகளை பின்வருமாறு விவரிக்கலாம்.

- பிரதிநிதித்துவம் – அண்டனி டவுன்ஸ் கூறியது போல், அரசியல் சந்தை பொருளாதாரச் சந்தை செயல்படுவதைப் போலவே செயல்படுகிறது. அரசியல் கட்சிகள் அரசியல் சந்தையில் மத்தியஸ்தம் வகிப்பவர்களாவர். அரசியல் முறைமையில் கட்சிகள் வாக்காளர்கள் மற்றும் கட்சி உறுப்பினர்களின் நலன்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்றன.

Department of Examinations - Sri Lanka

- அரசியல் குறிக்கோள்களை அமைத்தல் மற்றும் வடிவமைத்தல் – தேர்தல் கொள்கை அறிக்கைகள், பிரசாரம் மற்றும் கூட்டங்கள் மூலம் அரசியல் இலக்குகளை / குறிக்கோள்களை வடிவமைத்தல்.

- நலன்களை வெளிப்படுத்துதல் மற்றும் ஒன்றுதிரட்டுதல் – பல்வேறு சமூக குழுக்களின் நலன்களை ஒருங்கிணைத்து அவர்களை அரசியல் நிகழ்ச்சி நிரல்களுடன் இணைத்தல்.

- சமூகமயமாக்கல் மற்றும் அணிதிரட்டல் – ஆட்சிக்கு ஆதரவாக அல்லது எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் பிரச்சாரம் செய்தல் மற்றும் மக்களை அணிதிரட்டுதல் மூலம் மக்களின் அரசியல் அறிவினை வளர்த்தல்.

- அரசாங்க அதிகாரத்தை ஒழுங்குபடுத்தல் – அரசாங்கத்திற்கான உறுத்தித்தன்மையையும் ஒருமைப்பாட்டையும் வழங்குதல். மேலும் அரசியல் கட்சிகள் இல்லாதபட்சத்தில் அங்கு ஜனநாயகத்தின் இருப்பு இல்லை என்பது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகும்.

- அரசியல் முறைமையின் சட்டபூர்வமான தன்மைக்கு பங்களித்தல் – கட்சி என்பது குடிமக்கள், சமூகக் குழுக்கள் மற்றும் அரசாங்கத்தை இணைக்கும் பாலமாகும்.

## குறிப்பு

10 ஆவது வினாவிற்கு புள்ளிகள் வழங்கும் பொழுது அறிமுகத்திற்கு 01, உள்ளடக்கத்திற்கு 08 மற்றும் முடிவுரைக்கு 01 என்ற அடிப்படையில் வழங்கவும்.

Department of Examinations - Sri Lanka